சம்ஸ்கிருத இலகு போதம்

I & II

கா. கைலாசநாதக் குருக்கள் M.A, Ph.D.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

சம்ஸ்கிருத
இலகு போதம் I, II

வாழ்நாட் பேராசிரியர், இலக்கிய கலாநிதி

பிரம்மஸ்ரீ **கா. கைலாசநாதக் குருக்கள் M.A, Ph.D.**

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் :
சம்ஸ்கிருத இலகு போதம் முதலாம் இரண்டாம் புத்தகங்கள்
ஆசிரியர் :
கா. கைலாசநாதக் குருக்கள் M.A, Ph.D.
பதிப்பாசிரியர் :
ச. பத்மநாபன்
முதற் பதிப்பு :
முதற் புத்தகம் 1959
இரண்டாம் புத்தகம் 1962
இரண்டாம் பதிப்பு :
முதலாம் இரண்டாம் புத்தகங்கள் 2013
வெளியீடு :
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்
248, 1/1, காலி வீதி, கொழும்பு – 04,
இலங்கை.
அச்சு :
யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
48 B, புளூமெண்டால் வீதி, கொழும்பு – 13
தொ. பே. : 2330195
பக்கங்கள் :
VIII + I - viii + 64
II - vi + 110
பிரதிகள் : 1000
அளவு : 1/8
கடதாசி : 80 ஜி. எஸ். எம். வெள்ளைத்தாள்
விலை : ரூபா 250/-

Title:
Samaskrita Ilagubhodam Part I & Part II
Author :
K. Kailasanatha Kurukkal M.A, Ph.D.
Editor:
S. Padmanaban
First Edition :
Part I - 1959
Part II - 1962
Second Edition :
Part I & Part II - 2013
Published by:
Dept. of Hindu Religious & Cultural Affairs
248, 1/1, Galle Road, Colombo - 04,
Sri Lanka.
Printers :
Unie Arts (Pvt) Ltd.,
48 B, Bloemendhal Road, Colombo 13.
Tel: 2330195
No of Pages :
VIII + I - viii + 64
II - vi + 110
No of Copies : 1000
Size : 1/8
Paper Used : 80 GSM White Paper
Price :Rs. 250/=

ISBN : 978-955-9233-30-5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிப்புரை

சம்ஸ்கிருத மொழியை ஆர்வத்துடன் கற்பதற்கு ஏற்ற முறையில் ஆரம்பம் முதல் தக்க ஆசிரியரின் வழிகாட்டலோடு இலகு வழிகாட்டியாக அமையும் பயிற்சி நூலே **சம்ஸ்கிருத இலகு போதம்** ஆகும். இந்நூல் பாகம் ஒன்று 1959ஆம் ஆண்டும், பாகம் இரண்டு 1962ஆம் ஆண்டும் கொழும்பு கலாநிலைய வெளியீடாக வெளிவந்தன. வாழ்நாட் பேராசிரியர், இலக்கிய கலாநிதி, கலாநிதி பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களது அறிவு முதிர்ச்சியாலும், அனுபவ முதிர்ச்சியாலும் இலகு தமிழில் எளிமைப்படுத்தப்பட்ட சம்ஸ்கிருத இலக்கணப் பிரவேச நூல்களாக இவ்விரு நூல்களும் விளங்குகின்றன.

எமது குருநாதர் அவர்கள் சம்ஸ்கிருத இலக்கணத்தில் மிகுந்த தேர்ச்சிமிக்கவர். தமது ஆழமான மொழிப்புலமையை படிமுறைப் பயிற்சி நூல்களூடாக பயிற்றுவிக்க விளைந்த முயற்சியின் பயனே இவ்விரு நூல்களுமாகும். முதலாம் நூல் சம்ஸ்கிருத மொழியின் தேவநாகரி லிபியினை எவ்வாறு எழுதுவது; எவ்வாறு உச்சரிப்பது என்பதனை தமிழ்மொழியோடு ஒத்ததன்மையிலிருந்து தெரிந்ததிலிருந்து தெரியாததை அறிமுகம் செய்யும் படிமுறையில் ஒலியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தி உச்சரிப்புமுறைகளுக்கு பயிற்சியளித்து விளங்கவைப்பது சிறந்த அம்சமாகும்.

சம்ஸ்கிருத இலகுபோதம் இரண்டாம் பாகம் சம்ஸ்கிருத மொழியின் ஆரம்ப அடிப்படை இலக்கணத் தன்மைகளில் சில அகச்சந்தி விதிகளையும் சில புறச்சந்தி விதிகளையும் மற்றும் வினையெச்ச, வினைமுற்று வடிவங்களின் தோற்றங்கள், பெயரடிகளின் உருவாக்கம் என்பவற்றை இயலுமான அளவு இலகுபடுத்திக்கூறும் நூலாக அமைகின்றது.

சம்ஸ்கிருத மொழியை கற்கவிளைவோருக்கு இலக்கண அறிவு இன்றியமையாததாகும். சம்ஸ்கிருத மொழியின் இலக்கணம் மிகவும் பரந்த தன்மையது, கடினமானது, மரபுத்தன்மையுடையது. இத்தகைய தன்மையிலிருந்து எளிமைப்படுத்தி இனிமையானதும், சொல்நயம் மிக்கதுமாக சம்ஸ்கிருத மொழியின் நயம்மிக்க இலக்கிய நூல்களை தாமாக அறிந்து கொள்வதற்கு ஏற்றவகையில் முதற்படியாக எழுத்துக்களையும், இரண்டாம்படியாக இலக்கணத்தை அறிமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் நெறிமுறையும் நூலாசிரியரின் புலமைக்கு தக்க சான்றாக அமைகின்றது. இப் பெரியாரின் சிந்தனையில் ஏனைய பாகங்கள் உருவாகாது போனமை எமது துரதிஷ்டமே ஆகும்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் புத்துணர்ச்சி மிக்க செயற்பாடாக ஆர்வமுள்ளோர்க்கு நாடளாவிய ரீதியில் சம்ஸ்கிருத மொழியைப் பயிற்றுவித்து வருகின்றது. இப்பயிற்சி நெறிக்கு அடிப்படைப் பாட நூலாக இவ்விரு பாகங்களையுடைய சம்ஸ்கிருத இலகுபோதம் விளங்குகின்றது. சுமார் ஐம்பதாண்டு காலங்களுக்குப் பின் மீள்பதிப்பாக இவ்விரு நூல்களும் வெளிவருவது காலத்தின் தேவையாக அமைகின்றது.

இலங்கையின் பல பாகங்களிலும் பல்வேறு மாணவர் பரம்பரையினரை உருவாக்கிய பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களது நல்லெண்ணப் பதிவுகள் என்றும் எம்மை மேன்மையடையச் செய்யும். நல்லோர்களது சிந்தனைகளும், வழிகாட்டல்களும் அனுபவப் பகிர்வுகளும் என்றும் காலத்தால் அழியாத தன்மையது என்பதற்கு இந்நூலின் மீள்பதிப்பு எடுத்துக்காட்டாக அமைகின்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆக்கத் திறன்மிக்க செயற்பாடாக இந்நூலை பழமையான மரபு மாறாது அதே தன்மையோடு மறுபதிப்புச் செய்து வெளியிடும் முயற்சி வரவேற்கத்தக்கது. இம்முயற்சியில் பல்வேறு வழிகளிலும் தம்மை அர்ப்பணித்த அனைவருக்கும் இறைவன் திருவருளும், குருவருளும் பொலிவதாக.

ஒரு தொகுதியாக உள்ளடக்கப்பட்ட சம்ஸ்கிருத இலகு போதம் பாகம் ஒன்று, பாகம் இரண்டு எனும் நூல்களிரண்டையும் சம்ஸ்கிருத ஆர்வலர்கள் அனைவரும் பெற்று பயனடைவீர்களாக.

ச. பத்மநாபன்
பதிப்பாசிரியர்

விரிவுரையாளர்,
சம்ஸ்கிருதத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டுரை

உலகிலே தொன்மையும் இலக்கிய வளமுள்ள மொழிகளிலே சமஸ்கிருதமும் ஒன்றாகும். இது ஏறக்குறைய நாலாயிரம் ஆண்டுகால இலக்கிய வளமுள்ள மொழியாகும். இந்தியாவின் முதுமொழிகளுள் ஒன்று. இந்துக்களின் பொதுமொழியாக, அறிவியல் மொழியாக, தேவ பாஷையாக விளங்கி வந்துள்ளது. இம் மொழி பொதுமக்கள் பேச்சுவழக்கில் இல்லாமல் இருப்பினும், அதன் பல்வேறு நூல்களை ஆராய்ந்து வரும் அறிஞர்களிடையே இன்றும் பேசப்பட்டு வருகிறது.

சமஸ்கிருத மொழியிலே மிகச் சிறந்த இலக்கிய நூல்கள் அமைந்துள்ளன. வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள், மகாபாரதம், தோத்திரங்கள் (சிவானந்தலகரி, சௌந்தர்யலகரி), நாட்டிய நூல்கள் என்பன எல்லாம் சமஸ்கிருத மொழியிலேயே அமைந்துள்ளன. அத்தகைய செழுமை மிகுந்த மொழியினை இன்றைய சமுதாயத்தினரிடையே கற்பிக்க வேண்டும், அது தொடர்பான இலக்கண அறிவினை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு எமது திணைக்களத்தால் ஆய்வுப் பிரிவின் ஊடாக சமஸ்கிருத மொழி கற்பிக்கப்படுகின்றது.

சமஸ்கிருதக் கல்விக்கு அடிப்படை நூலாக அமையும் வகையில் பேராசிரியர் கைலாசநாதக் குருக்களால் எழுதப்பட்ட சமஸ்கிருத இலகு போதம் முதலாம், இரண்டாம் நூல்கள் திணைக்களத்தால் இவ்வருடம் மீள்பதிப்பிக்கப்படுகிறது. எவ்வாறு சமஸ்கிருத மொழியை எழுதுவது, எவ்வாறு உச்சரிப்பது என்னும் விடயங்கள் மிகத் தெளிவாக விளங்கப்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது. இந்நூல் சமஸ்கிருத மொழியினைக் கற்போர் அனைவருக்கும் மிகவும் பயனுடையதாக அமையும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

பேராசிரியர் க. கைலாசநாதக்குருக்களின் முதன்மை மாணாக்கர்களில் ஒருவரான சிவஸ்ரீ பத்மநாத சர்மாவிடமே இந்நூலின் பதிப்புப் பணியினை வழங்குவது பொருத்தமெனக் கருதி இப்பணியினை ஒப்படைத்தோம். இவர் சமஸ்கிருத மொழியில் மிகவும் புலமைமிக்கவர். யாழ்ப்பாணப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழக சமஸ்கிருத துறையின் சிரேஸ்ட விரிவுரையாளர் ஆவார். இவரே இந் நூலின் பிரதி ஒப்பீடுகள் அனைத்தையும் மேற்கொண்டு இந்நூலின் செம்மைக்கு உறுதுணையாக விளங்கினார்.

இவரது பணிகளுக்கு திணைக்களத்தின் சார்பில் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் இந்நூலின் பதிப்புப் பணியில் ஈடுபட்ட ஆய்வுத்துறை உதவிப் பணிப்பாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும், யுனி ஆட்ஸ் அச்சகத்தாருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

சாந்தி நாவுக்கரசன்
பணிப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளடக்கம்

பாகம் ஒன்று

		பக்கம்
1.	முதலாம் பாடம்	1
2.	இரண்டாம் பாடம்	3
3.	மூன்றாம் பாடம்	5
4.	நான்காம் பாடம்	7
5.	ஐந்தாம் பாடம்	10
6.	ஆறாம் பாடம்	12
7.	ஏழாம் பாடம்	14
8.	எட்டாம் பாடம்	17
9.	ஒன்பதாம் பாடம்	19
10.	பத்தாம் பாடம்	22
11.	பதினோராம் பாடம்	24
12.	பன்னிரண்டாம் பாடம்	27
13.	பதின்மூன்றாம் பாடம்	30
14.	பதினாலாம் பாடம்	33
15.	பதினைந்தாம் பாடம்	35
16.	பதினாறாம் பாடம்	39
17.	பதினேழாம் பாடம்	43
18.	பதினெட்டாம் பாடம்	46
19.	பத்தொன்பதாம் பாடம்	49
20.	இருபதாம் பாடம்	51
21.	உயிர்கள்	55
22.	மெய்கள்	55
23.	உயிர்மெய்கள்	56
24.	கூட்டுமெய்கள்	59
25.	அகராதி - சம்ஸ்கிருதம் - தமிழ்	60
26.	அகராதி - தமிழ் - சம்ஸ்கிருதம்	62

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாகம் இரண்டு

		பக்கம்
1.	பாடம் 1	1
2.	பாடம் 2	3
3.	பாடம் 3	6
4.	பாடம் 4	8
5.	பாடம் 5	10
6.	பாடம் 6	12
7.	பாடம் 7	14
8.	பாடம் 8	16
9.	பாடம் 9	18
10.	பாடம் 10	20
11.	பாடம் 11	23
12.	பாடம் 12	25
13.	பாடம் 13	27
14.	பாடம் 14	29
15.	பாடம் 15	31
16.	பாடம் 16	33
17.	பாடம் 17	36
18.	பாடம் 18	38
19.	பாடம் 19	40
20.	பாடம் 20	42
21.	பாடம் 21	44
22.	பாடம் 22	46
23.	பாடம் 23	48
24.	பாடம் 24	50
25.	பாடம் 25	52
26.	பாடம் 26	54
27.	பாடம் 27	56
28.	பாடம் 28	58
29.	பாடம் 29	60
30.	பாடம் 30	62
31.	சொற்றொகுதிகள்	74
32.	அகராதி - சம்ஸ்கிருதம் - தமிழ்	84
33.	அகராதி - தமிழ் - சம்ஸ்கிருதம்	101

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

॥ संस्कृतलघुबोधः ॥

சம்ஸ்கிருத இலகுபோதம்

முதற் புத்தகம்

கா. கைலாசநாதக் குருக்கள், M.A.
இலங்கைப் பல்கலைச் சம்ஸ்கிருத விரிவுரையாளர்
இயற்றியது.

வெளியீட்டகம் :
கலா நிலையம்
செட்டியார் தெரு, கொழும்பு.
1959

விலை ரூ. 1 –25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

॥ समर्पणम् ॥

बालानां लघुबोधाय बालोऽहमुद्यतोऽधुना ।
ग्रन्थस्य लघुबोधस्यासमर्थोऽपि निबन्धने ॥

गुरुप्रसादास्पदतया किमसाध्यं भविष्यति ।
आयासेनैव चाल्पेन ग्रन्थः परिसमाप्यते ॥

स्वीकृता तन्मुखाद्विद्या तदायत्ता मया पुरा ।
आत्तविद्योत्थकौशल्यफलमेतत् स्फुटं हि तत् ॥

विशिष्टगुरुवर्याय श्रीसीतारामशास्त्रिणे ।
समर्पयाम्यहं ग्रन्थं तदधीनमिति स्मरन् ॥

न्यूनातिरेका ये दोषा दृश्यन्ते तत्र तत्र च ।
ते सर्वे मत्कृताः सद्भिः क्षम्यतामनुकंपया ॥

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பல்கலைக் கழகத்துத் தமிழ்ப் பேராசிரியரும்,
கீழைத்தேயக்கலைப் பீடத்தலைவரும், இற்றை ஞான்று
பதில் உபவேந்தராகக் கடமையாற்றுபவருமாகிய
டாக்டர் க. கணபதிப்பிள்ளை அவர்கள்
(B.A. Hons. (Indo-Aryan), Ph. D. (Lond.) Vidvan (Annamalai)

ஃஹறிய அணிந்துரை

பிரமஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் எழுதி வரும் சம்ஸ்கிருத இலகுபோதம் என்னும் நூலின் முதற் புத்தகத்தைக் கண்ணுற்றேன். இது தமிழ்ச்சிறார் சங்கதம் பயிலுவதற்கு ஏற்றமுறையில் எழுதப்பட்டுள்ளது. இக்காலத்தில் கல்விநிலையத் தேர்வுகள் யாவற்றிலும் தேவநாகரி எழுத்துக்கள் வேண்டப்படுவதால் அவ்வெழுத்துக்களைப் படிப்படியாக இந்நூலாசிரியர் மாணவர்க்குச் செவ்வனே பழக்கி, அதன்பின் இக்காலமுறையில் மாணவரின் தரத்திற்கேற்பச் சொற்களை வகுத்துப் பாடங்களை இலகுவான முறையிலும் மாணவர்க்கு ஊக்கங்கொடுக்கக்கூடிய வகையிலும் இந்நூலை ஆக்கியுள்ளார். இது சங்கதமொழியைப் பயில்வோர் யாவர்க்கும் மிகுந்த பயனைக் கொடுக்கும் என்று நம்புகிறேன். எம் மூதாதையர் பயின்றுவந்த சிறந்த மொழிகளுள் சங்கதமும் ஒன்று. தமிழில் உண்மையான புலமையெய்த வேண்டுமாயின் ஒருவன் சங்கதத்தையும் தவறாது பயிலுதல் வேண்டும்.

இன்னும் இதுபோன்ற சிறந்த நூல்களை இயற்றி ஆசிரியரவர்கள் தமிழ் கூறும் நல்லுலகத்துக்குச் சிறந்த தொண்டுபுரிவாராக.

வாழ்க தமிழ் மொழி.

க. கணபதிப்பிள்ளை

இலங்கைப் பல்கலைக் கழகம்,
பேராதனை.
5.10.59

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுகோள்

"तं सन्तः श्रोतुमर्हन्ति सदसद्व्यक्तिहेतवः"

சிறுவர்க்கு ஆண்டாண்டு தோறும் மறுபடியும் மறுபடியும் படிப்பித்துப் பழுத்த அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் இப்புத்தகத்திற் காணப்படுங் குறைவுகளை எடுத்துக் காட்டினால் அடுத்த பதிப்பில் அவற்றை நிறைவு செய்தல் எளிதாயிருக்கும். அவ்வண்ணஞ் செய்யுமாறு பணிவுடன் வேண்டிக்கொள்ளுகிறேன்.

கா. கைலாசநாதக் குருக்கள்.

இலங்கைப் பல்கலைக்கழகம்,
பேராதனை.
14.04.1959

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிக்கோள்

சம்ஸ்கிருத எழுத்துக்கள் எல்லாவற்றையும் எழுதவும் உச்சரிக்கவும் வேண்டிய ஆற்றலை மாணவர்களுக்கு உண்டாக்குதல் ஒன்றே இந்நூலின் குறிக்கோள்.

நூற்பயன்

இப்புத்தகத்தைப் படிக்கும் மாணவர்கள் :–

1. எழுத்துக்களை ஒலிக்கவும் எழுதவும் **படிப்படியாகப்** பயில்வார்கள்.

2. கூட்டுமெய்களின் அமைப்பைச் சிரமம் **சிறிதுமின்றிச் சிறிது** சிறிதாகக் கற்பார்கள்.

3. எழுவாய், செயப்படுபொருள், வினைமுற்று ஆகிய உறுப்புகளை மட்டும் கொண்டு வருஞ் **சிறு வாக்கியங்களை வாசித்து விளங்கவும் தாமே அவற்றை அமைக்கவும்** வேண்டிய ஆற்றலைப் பெறுவார்கள்.

4. அங்கங்கே பாடங்களில் வரும் ஒரே வகை ஒலியுள்ள சொற்களை உரக்கப்படித்துப் பயிற்சி பெறுதலால் **உச்சரிப்பிற் தேர்ச்சி பெறுவார்கள்.**

5. புத்தகத்தைப் படித்து முடிக்கும் போது 150 – க்கு அதிகமான சம்ஸ்கிருதச் சொற்களை அறிந்து மேலும் சம்ஸ்கிருதம் படிக்க ஆவல்கொள்வார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
திருநெல்வேலி பரமேஸ்வரக் கல்லூரியில்
சம்ஸ்கிருதப் பேராசிரியராக இருக்கும்
வியாகரண சிரோமணி
பிரமஸ்ரீ T. K. சீதாராம சாஸ்திரிகள் இயம்பிய

சிறப்புப்பாயிரம்

॥ श्रीः ॥

शुभश्री सैंहलीयविश्वविद्यालयसंस्कृतप्रासङ्गिकमहाशयेन कैलासनाथगुरुणा नव्यशैलीमनुसृत्य द्राविड्या भाषया शिक्षणा-नुकूलः संस्कृतभाषायां प्रविविक्षूणां लघु लघुबोधाय ग्रथितोऽयं लघुबोधाख्यो ग्रन्थस्समवलोकितः । पाठरचनानुरीतिस्सोपान-क्रमेण सुलालिता प्रतिपाठं सभाषान्तरीकरणाभ्यासा शिशिक्षिष-माणानां हृदयाह्लादकारिणी च विलसति । अध्येतृणामध्यापकानां चात्यन्तमुपकुर्यादिति विश्वसिमि । उपर्युपर्येवं क्रमेणाध्येष्यमा-णानां सोपयुक्तान् सहृदयाह्लादकान् बहुलान्ग्रन्थान् ग्रथयितुं सर्वज्ञस्सर्वशक्तिमातनोत्विति सर्वेश्वरं प्रार्थये ॥

इत्थं
ति. कृष्णोपाध्यायात्मजः
सीतारामशास्त्री ।

परमेश्वरविद्यालयः,
तिरुनेल्वेलि.
1—6—1959.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் பாடம்

अ आ क् च् ट् त् प्

	क् — க்
अ — அ	च् — ச்
आ — ஆ	ट् — ட்
	त् — த்
	प् — ப்

இப்புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள வடமொழி எழுத்துக்கள் **நாகரி** எனப்படும்.

தமிழில் மெய்யைக் குறிக்க ஒரு புள்ளி எழுத்தின் மேல் இடப்பட்டிருப்பதையும், நாகரியில் மெய்யைக் குறிக்க எழுத்தினடியில் மிகச் சிறிய கோடு இடப்பட்டிருப்பதையும் மேலே காணலாம்.

நாகதை எங்கே தொடங்கி, எப்படித் தொடர்ந்து, எவ்விதம் முடிக்கவேண்டும் என்பதைப் பின்வரும் குறிப்புகள் விளக்கும்.

முதலில், **अ** வை உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம்.



अ க்குப் பக்கத்தில் மேல்கீழான **'தாய்க்கோடு'** இடப்படின் आ ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

क्, च्, ट्, त्, प् என்னும் எழுத்துக்களைக் கீழ் வருமாறு எழுதலாம்.



ஒவ்வொரு வரியிலும் முதலில் இடப்பட்ட புள்ளிகள் எழுத்துத் தொடங்குமிடத்தைக் காட்டுகின்றன. எழுத்தில் இடம்பெறாததால், இவை படிப்படியாக நீக்கப்பட்டுவிட்டன.

அப்பியாசம் 1

1. மெய்யைக் குறிக்கத் தமிழில் ஒரு புள்ளி இடப்படுவது போல், நாகரியில் என்ன இடப்படுகின்றது?

2. கீழ்வரும் எழுத்துக்களை நாகரியில் எழுதுக :

   ப், அ, ச், ஆ, க், ட்.

3. கீழ்வரும் நாகரி எழுத்துக்களைத் தமிழில் எழுதுக :

   त्, अ, क्, ट्, आ, च्

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் பாடம்

क च ट त प :

மெய்புடன் अ - வைச் சேர்க்கும்போது, அதனடியிலுள்ள கோடு மறைந்துவிடும். क् + अ = क. अ- வைச் சேர்த்த பிறகு, பக்கத்தில் மேல்கீழாக ஒரு கோடு । இடின் அது நெடிலாகும்.

क् + अ > क பக்கத்திற்கு கோடு வரும்போது का = கா.

क् + अ = क	क् + आ = का
च् + अ = च	च् + आ = चा
ट् + अ = ट	ट् + आ = टा
त् + अ = त	त् + आ = ता
प् + अ = प	प् + आ = पा

தமிழிற் சங்கம், காகம், பக்கம் என்ற சொற்களில் வரும் 'க' வெவ்வேறொலியைக் கொண்டு வருகின்றது. இதுபோலன்றி, வடமொழியில் எல்லா எழுத்துக்களும் மாறுபடாது தத்தமக்குரிய அவ்வவ்வொலியைக் கொண்டு எப்போதும் வருகின்றன.

உயிரையடுத்து இருப்புள்ளிகள் ஒன்றன்கீழொன்றாக வரும் போது **விசர்க்கம்** எனப் பெயர் பெறும். (உ-ம்) अः, इः, उः. விசர்க்கம் தமிழில் வரும் ஆய்தத்தின் ஒலியைப் பெறும். ஆனால், அது சொல்லின் இறுதியில் ஒலிக்கும்போது அதற்குமுன் உள்ள உயிரின் ஒலி, அதைத் தொடர்ந்து மிகச் சிறுக எதிரொலிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்றொகுதி I

तपः	தவம்	तातः	தந்தை
तापः	வெப்பம்	पातः	வீழ்ச்சி
काकः	காகம்	कटकः	காப்பு
पाकः	பாகம்	पाचकः	சமையற்காரன்

அப்பியாசம் 2

1. மெய்யெழுத்துடன் अ – வைக் கூட்டி எழுதும்போது என்ன மாற்றம் நிகழும்?
2. விசர்க்கத்தை எப்படி எழுதுதல் வேண்டும்? இதன் ஒலி எத்தகையது?
3. பின்வரும் எழுத்துக்களைப் பிரித்தெழுதுக :

   चा, ट, पा, त, का.

4. பின்வரும் எழுத்துக்களைச் சேர்த்தெழுதுக :

   क् + अ, ट् + आ, त् + अ, च् + आ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் பாடம்

इ ई ङ् ञ् ण् न् म्

ङ् – ங்

इ – இ

ई – ஈ

ञ् – ஞ்

ण् – ண்

न् – ந்

म् – ம்

மேலேயுள்ள எழுத்துக்களை எழுதுவதெப்படி என்பதைப் பின் வரும் குறிப்புகள் படிப்படியாக விளக்குகின்றன.

इ யின் மேல் ʿ என்ற அடையாளம் வரின் ई ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 3

1. பின்வருஞ் சொற்களை மேலிருந்து கீழாக உரக்க உச்சரித்தல் வேண்டும்.

कटः	काकः	चातकः
तटः	पाकः	पातकः
पटः	तातः	तापकः
नटः	पातः	नाटकः

2. நாகரியில் எழுதுக :

ங், கா, ந், த, ஞ், மா

3. பிரித்தெழுதுக :

चा, ङ, टा, प, णा, ञ

4. சேர்த்தெழுதுக :

ङ् + अ, म् + आ, ञ् + अ, ण् + आ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காம் பாடம்

ङ ञ ण न म

உயிர்மெய்யிலேறி வந்த इ ई இரண்டையுங்குறிக்க ^ என்னும் **விசிறி** அடையாளம் வரும். மெய்யுடன் आ வைச் சேர்த்து, आ வைக் குறிக்கும் கோடு முதலில் வரும்படி மாற்றி எழுதியபின், அதன்மேல் விசிறியை இட்டால் அது इ ஏறிவந்த உயிர்மெய்யாகும்.

प् + आ > पा > ाप > पि = பி

மெய்யுடன் आ- வைச் சேர்த்து, மேலே விசிறியை இடின் அது ई ஏறிவந்த உயிர் மெய்யாகும்.

म् + आ > मा > मी = மீ

இதேபோன்று, ஏனைய மெய்களுடன் इ ई சேர்ந்து எழுதப்படும்.

ङ् + इ = ङि	ङ् + ई = ङी
ञ् + इ = ञि	ञ् + ई = ञी
ण् + इ = णि	ण् + ई = णी
न् + इ = नि	न् + ई = नी
म् + इ = मि	म् + ई = मी

விழுகிறான், விழுகிறாள், விழுகின்றது எனத் தமிழில் ஈற்றெழுத்து மாறி வருமிடங்களில் வடமொழியில் **पतति** என்று ஈறு மாறாது வரும்.

नटः पतति	நடிகன் விழுகிறான்
माता पतति	தாய் விழுகிறாள்
कपिः पतति	குரங்கு விழுகின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்வரும் பாடங்களிற் காணப்படும் **नमति, पचति, तपति** போன்ற சொற்கள் ஒவ்வொன்றும் இப்படியே தனித் தனி மூன்று கருத்துக்களில் வரும்.

சொற்றொகுதி 2

नटः	நடிகன்	**पतति**	விழுகிறான்
कपिः	குரங்கு	**नमति**	வணங்குகிறான்
माता	தாய்	**नटति**	நடிக்கிறான்
पिता	தந்தை	**पचति**	சமைக்கிறான்
मीनः	மீன்	**तपति**	சூடேற்றுகிறான் / தவஞ்செய்கிறான்
आतपः	சூரியன்	**पाति**	காப்பாற்றுகிறான்

அப்பியாசம் 4

1. விழுகிறான், விழுகிறாள், விழுகிறது என்ற மூவகை வேறுபாடுகள் வடமொழியில் எப்படி வரும்?

2. பிரித்தெழுதுக :

   ना, ती, ञा, म, णि

3. சேர்த்தெழுதுக :

   प् + अ, न् + इ, ञ् + आ, म् + ई

4. நாகரியிலெழுதுக :

   ஙா, ஞீ, ம, நி, ணீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 5

தமிழில் மொழிபெயர்த்தெழுதுக :

1. काकः पतति
2. पिता नमति
3. माता पचति
4. नटः नटति
5. आतपः तपति
6. कपिः पतति
7. नटः नमति
8. पाचकः पचति
9. पिता नटति
10. तातः तपति

அப்பியாசம் 6

வடமொழியிற் பெயர்த்தெழுதுக :

1. காப்பு விழுகின்றது
2. தாய் வணங்குகின்றாள்
3. தந்தை சமைக்கிறார்
4. குரங்கு கூத்தாடுகிறது
5. வெப்பம் தகிக்கிறது
6. மீன் விழுகின்றது
7. சமையற்காரன் சமைக்கிறான்
8. மனிதன் வணங்குகிறான்.
9. தாய் நடிக்கிறாள்
10. தந்தை தவஞ்செய்கிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாம் பாடம்

उ ऊ य् र् ल् व्

य् — ய்

उ — உ   र् — ர்

ऊ — ஊ   ल् — ல்

व् — வ்

மேலே காணப்படும் எழுத்துக்களைப் பின்வரும் குறிப்புக்களின் துணையுடனெழுதப் பயிலல் வேண்டும்.



ॖ என்னும் அடையாளத்தை उ- வின் : நடுவிலிட ऊ ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 7

1. பின்வருஞ் சொற்களை மேலிருந்து கீழாக உரக்கப் படித்தல் வேண்டும்.

तमः	नतिः	पतनम्
नमः	मतिः	नटनम्
मनः	पतिः	मननम्
मतः	कपिः	तपनम्

2. பிரித்தெழுதுக :

मी, च्चा, त, चि, य

3. சேர்த்தெழுதுக :

य् + अ, र् + इ, य् + आ, ल् + इ, न् + अ

4. நாகரியிலெழுதுக :

பிதா, பதனம், மனனம், நடனம், மாதா.

அப்பியாசம் 8

தமிழில் மொழிபெயர்த்தெழுதுக :

1. तातः पतति
2. माता नटति
3. पिता नमति
4. नटः तपति
5. पाचकः पतति
6. नटः नमति
7. पिता तपति
8. माता पतति
9. पाचकः तपति
10. आतपः पतति

அப்பியாசம் 9

வடமொழியிற் பெயர்த்தெழுதுக :

1. சூரியன் சூடேற்றுகிறான்.
2. நடிகன் வணங்குகிறான்.
3. குரங்கு விழுகின்றது.
4. தாய் சமைக்கிறாள்.
5. மீன் விழுகின்றது.
6. தந்தை தவஞ்செய்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறாம் பாடம்

य र ल व

य् + अ = य	य् + आ = या	य् + इ = यि	य् + ई = यी
र् + अ = र	र् + आ = रा	र् + इ = रि	र् + ई = री
ल् + अ = ल	ल् + आ – ला	ल् + इ = लि	ल् + ई = ली
व् + अ = व	व् + आ = वा	व् + इ = वि	व् + ई = वी

உயிர் மெய்யில் उ வைக் குறிக்க ‘ ु ’ என்னும் அடையாளமும், ऊ வைக் குறிக்க ‘ ू ’ என்னும் அடையாளமும் மெய்யினடியில் இடப்படும்.

य् + उ = यु	य् + ऊ = यू

र् உடன் उ வையும் ऊ வையும் சேர்க்கும் போது மட்டும் இவ்வடையாளங்கள் நடுவில் இடப்படும்.

र् + उ = रु	र् + ऊ = रू
ल् + उ = लु	ल् + ऊ = लू
व् + उ = वु	व् + ऊ = वू

சொற்றொகுதி 3

कविः	கவி	किरातः	வேடன்	उमा	உமை
पविः	இடி	कुमारः	சிறுவன்	वाति	வீசுகிறது
नरः	மனிதன்	पावकः	நெருப்பு	याति	போகிறான்
काली	காளி	अनिलः	காற்று	पुनाति	சுத்தமாக்குகிறான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 10

1. பிரித்தெழுதுக :

   कि, या, नू, पि, वु

2. சேர்த்தெழுதுக :

   क्+उ, य्+अ, ल्+इ, व्+आ, र्+उ

3. நாகரியில் எழுதுக :

   ரூ, சீ, டு, து, பா, நு.

அப்பியாசம் 11

தமிழில் மொழிபெயர்த்தெழுதுக :

1. काकः पुनाति
2. तातः याति
3. अनिलः वाति
4. नरः पचति
5. तातः पाति
6. माता याति
7. पविः पतति
8. कविः याति
9. पावकः पुनाति
10. काली पाति

அப்பியாசம் 12

வடமொழியிற் பெயர்த்தெழுதுக :

1. சமையற்காரன் போகிறான்.
2. கவி விழுகிறான்.
3. தாய் காப்பாற்றுகிறாள்.
4. சூரியன் சுத்தமாக்குகிறான்.
5. நடிகன் போகிறான்.
6. மனிதன் காப்பாற்றுகிறான்.
7. குரங்கு போகின்றது.
8. மனிதன் வணங்குகிறான்.
9. கவி நடிக்கிறான்
10. வேடன் காப்பாற்றுகிறான்.
11. மீன் சுத்தமாக்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாம் பாடம்

ऋ ॠ श् ष् स् ह्

ऋ என்பதற்கு 'இறுதி' என்பதில் வரும் 'று' வின் ஒலி உண்டு.

ॠ என்பதை உச்சரிக்க ॠ வை நீட்டி ஒலித்தல் வேண்டும்.

श् இன் பிறப்பிடமும் च् இன் பிறப்பிடமும் ஒன்றே. च् பிறக்குமிடத்தில் நாக்கையழுத்தி இனிக்குறிப்பிடப்போகும் स् ஒலியை எழுப்பமுயன்றால் श् ஐ ஒலிக்கலாம்.

स् என்பதற்கு 'சந்தி' என்பதில் வரும் 'ச' வின் ஒலி உண்டு.

ष என்பதற்கு 'வருஷம்' என்பதில் வரும் 'ஷ' வின் ஒலி உண்டு.

ह என்பதற்கு 'மோகம்' என்பதில் வரும் 'க' வின் ஒலி உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழே வரும் குறிப்புகள் இவ்வெழுத்துக்களை எழுதும் முறையை விளக்குகின்றன.



சொற்றொகுதி 4

तरुः மரம்	नयति செலுத்துகிறான்
पतिः தலைவன்	वपति விதைக்கிறான்
वानरः குரங்கு	आयाति வருகிறான்

அப்பியாசம் 13

1. மேலிருந்து கீழாக உரக்க வாசித்தல் வேண்டும் :

पयः	करः	ऊरुः	लवणम्
करः	नरः	रुरुः	करणम्
मयः	वरः	तरुः	चरणम्
वयः	उरः	पुरुः	मरणम्

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பிரித்தெழுதுக :

रा, नी, सि, शु, षा, हि.

3. சேர்த்தெழுதுக :

श् + इ, ष् + उ, स् + आ, ह् + ऊ.

4. நாகரியில் எழுதுக :

பதநம், நீதி, மனனம், தபனம், கிரணம்.

அப்பியாசம் 14

தமிழில் மொழி பெயர்த்தெழுதுக :

1. तातः नयति
2. पिता वपति
3. काकः याति
4. पतिः नमति
5. नरः नयति
6. वानरः पतति
7. पिता याति
8. नरः नटति
9. कुमारः पाति
10. नरः आयाति
11. तरुः नयति

அப்பியாசம் 15

வடமொழியிற் பெயர்த்தெழுதுக :

1. தந்தை செலுத்துகிறார்.
2. மனிதன் விதைக்கிறான்.
3. வேடன் வணங்குகிறான்.
4. சிறுவன் போகிறான்.
5. தலைவன் செலுத்துகிறான்.
6. மரம் விழுகின்றது.
7. தாய் விதைக்கிறாள்.
8. வேடன் போகிறான்.
9. தந்தை காக்கிறார்.
10. மனிதன் வருகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாம் பாடம்

श ष स ह

श	शा	शि	शी	शु	शू
ष	षा	षि	षी	षु	षू
स	सा	सि	सी	सु	सू
ह	हा	हि	ही	हु	हू

உயிர் மெய்யில் ऋ வைக் குறிக்க ृ என்னும் அடையாளமும் ॠ வைக் குறிக்க ॄ என்னும் அடையாளமும் மெய்யின் கீழ் இடப்படும்.

श् + ऋ = शृ	श् + ॠ = शॄ
ष् + ऋ = षृ	ष् + ॠ = षॄ
स् + ऋ = सृ	स् + ॠ = सॄ
ह् + ऋ = हृ	ह् + ॠ = हॄ

हृ வில் இவ்வடையாளம் சிறிது உள்ளுக்கு இடப்பட்டிருப்பதைக் கவனிக்கவும்.

சொற்றொகுதி 5

ऋषिः	இருதடி	कुसुमम्	பூ
शिशुः	குழந்தை	वसति	வசிக்கிறான்
कृषिकः	உழவன்	दहति	எரிக்கிறான்
न	இல்லை	हरति	கவருகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 16

1. பிரித்தெழுதுக :

सु, ली, नि, चृ, रू.

2. சேர்த்தெழுதுக :

श् + ऋ, ल् + इ, र् + उ, ह् + ऋ, ङ् + उ

3. நாகரியிலெழுதுக :

ஷி, நூ, மீ, து, ரூ, கு.

அப்பியாசம் 17

தமிழில் மொழிபெயர்த்தெழுதுக :

1. कृषिकः वसति
2. कृशानुः दहति
3. शिशुः पतति
4. ऋषिः नमति
5. कविः वसति
6. नरः याति
7. माता नयति
8. काकः वसति
9. पावकः दहति
10. ऋषिः पतति
11. किरातः वसति

அப்பியாசம் 18

வடமொழியிற் பெயர்த்தெழுதுக :

1. தந்தை வசிக்கிறார்.
2. சூரியன் எரிக்கிறான்.
3. இருடி தவஞ்செய்கின்றார்.
4. மீன் வசிக்கின்றது.
5. உழவன் விழுகிறான்.
6. தலைவன் தவஞ்செய்கிறான்.
7. தாய் சுத்தமாக்குகிறாள்.
8. மனிதன் வசிக்கிறான்.
9. தந்தை தவஞ்செய்கிறார்.
10. பூ விழுகின்றது.
11. உழவன் வணங்குகிறான்.
12. சமையற்காரன் வருகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்பதாம் பாடம்

ഌ ग ज ड द ब

மேலே உள்ள எழுத்துக்கள் தமிழில் இல்லை. எனினும் இவற்றின் ஒலிகளை அங்கங்கே கேட்கலாம்.

ഌ என்பதன் ஒலியை 'இலுப்பை' என்பதன் 'லு' வில் கேட்கலாம்.

ग என்பதன் ஒலியை 'சங்கம்' என்பதன் 'க' வில் கேட்கலாம்.

ज என்பதன் ஒலியை 'பஞ்சம்' என்பதன் 'ச' வில் கேட்கலாம்.

ड என்பதன் ஒலியை 'பண்டம்' என்பதன் 'ட' வில் கேட்கலாம்.

द என்பதன் ஒலியை 'பந்தம்' என்பதன் 'த' வில் கேட்கலாம்.

ब என்பதன் ஒலியை 'கம்பன்' என்பதன் 'ப' வில் கேட்கலாம்.

இவ்வெழுத்துக்களை எழுதும் முறை பின்வருமாறு :



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்றொகுதி 6

वृषः	எருது	विशति	நுழைகிறான்
कृशानुः	நெருப்பு	वहति	தாங்குகிறான்
नृपः	அரசன்	हसति	சிரிக்கிறான்

அப்பியாசம் 19

1. பின்வருஞ் சொற்களை மேலிருந்து கீழாக உரக்கப் படித்தல் வேண்டும்.

शाला	सरणम्	शकलम्
माला	हरणम्	शबलम्
बाला	शरणम्	सकलम्
हाला	वरणम्	सलिलम्

2. பிரித்தெழுதுக :

सा, शु, पृ, रु, षि, जृ.

3. சேர்த்தெழுதுக :

ग् + अ, क् + ऋ, ज् + इ, र् + उ.

அப்பியாசம் 20

தமிழில் மொழிபெயர்த்தெழுதுக :

1. तातः हसति
2. वृषः पतति
3. आतपः याति
4. कविः पाति
5. नरः पुनाति
6. पाचकः नयति
7. पतिः वपति
8. कविः हसति
9. वृषः याति
10. नरः नयति
11. ऋषिः हसति
12. वृषः वहति

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 21

வடமொழியிற் பெயர்த்தெழுதுக :

1. நடிகன் சிரிக்கிறான்.
2. எருது வருகிறது.
3. சமையற்காரன் விதைக்கிறான்.
4. வேடன் செலுத்துகிறான்.
5. தலைவன் வசிக்கிறான்.
6. உழவன் வணங்குகிறான்.
7. நடிகன் காப்பாற்றுகிறான்.
8. மனிதன் விழுகிறான்.
9. தாய் சிரிக்கிறாள்.
10. வேடன் வருகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தாம் பாடம்

ग ज ड द ब

ग	गा	गि	गी	गु	गू	गृ	गॄ
ज	जा	जि	जी	जु	जू	जृ	जॄ
ड	डा	डि	डी	डु	डू	डृ	डॄ
द	दा	दि	दी	दु	दू	दृ	दॄ
ब	बा	बि	बी	बु	बू	बृ	बॄ

உயிர் மெய்யில் ऌ வைக் குறிக்க மேற்கோடு நீங்கிய ऌ மெய்யின் கீழ் எழுதப்படும்.

ग् + ऌ = गॢ

ज् + ऌ = जॢ

ड् + ऌ = डॢ

द् + ऌ = दॢ

ष् + ऌ = षॢ

சொற்றொகுதி 7

राजा	அரசன்	दिशति	காட்டுகிறான்
नदी	ஆறு	पिबति	குடிக்கிறான்
गुरुः	குரு, ஆசிரியன்	जीवति	சீவிக்கிறான்
ततः	பிறகு	ददाति	கொடுக்கிறான்
बालकः	சிறுவன்	उपदिशाति	உபதேசிக்கிறான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 22

1. பிரித்தெழுதுக :

कु, पी, बु, सृ, पॣ.

2. சேர்த்தெழுதுக :

च् + इ, क् + उ, ष + ऋ, र् + उ, द् + ऌ.

3. இதுவரை படித்த எழுத்துக்களில் தமிழில் வராது வட மொழியில் மட்டும் வரும் எழுத்துக்களைத் தருக.

அப்பியாசம் 23

தமிழில் மொழிபெயர்த்தெழுதுக :

1. नृप : दिशति
2. कपि : पिबति
3. राजा दिशति
4. पिता वसति
5. नटः हसति
6. पतिः दिशति
7. वानरः पिबति
8. राजा नयति
9. किरातः पतति
10. पिता पुनाति
11. कृषिकः दिशति
12. कपिः पिबति
13. काकः जीवति
14. तातः ददाति
15. गुरुः उपदिशति
16. पिता पतति

அப்பியாசம் 24

வடமொழியிற் பெயர்த்தெழுதுக :

1. தாய் காட்டுகிறாள்
2. மாடு குடிக்கிறது
3. அரசன் போகிறான்
4. மீன் சீவிக்கின்றது
5. வேடன் கொடுக்கிறான்
6. தந்தை உபதேசிக்கிறார்
7. நடிகன் சுத்தமாக்குகிறான்
8. தாய் வசிக்கிறாள்
9. மனிதன் காட்டுகிறான்
10. உழவன் குடிக்கிறான்
11. நடிகன் விழுகிறான்
12. அரசன் வணங்குகிறான்
13. சமையற்காரன் கொடுக்கிறான்
14. தாய் உபதேசிக்கிறாள்
15. வேடன் சிரிக்கிறான்
16. காகம் குடிக்கின்றது
17. அரசன் வருகிறான்
18. கவி செலுத்துகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினோராம் பாடம்

ए ऐ ख् छ् ठ् थ् फ्

ए ஏ
ऐ ஐ

ख् छ् ठ् थ् फ् என்னும் எழுத்துக்கள் தமிழில் இல்லை. இவற்றின் ஒலிகளும் தமிழிற் கிடையா. கீழ் வரும் விளக்கம் ஓரளவிற்குப் பயன்படும். ஆசிரியரிடமிருந்தே இவற்றைச் சரிவரப் பயிலலாம்.

क् ஐ நன்கு அழுத்தி உச்சரித்தால் ख् ஆகும்.
च् ஐ நன்கு அழுத்தி உச்சரித்தால் छ् ஆகும்.
ट् ஐ நன்கு அழுத்தி உச்சரித்தால் ठ् ஆகும்.
त् ஐ நன்கு அழுத்தி உச்சரித்தால் थ् ஆகும்.
प् ஐ நன்கு அழுத்தி உச்சரித்தால் फ् ஆகும்.

ஏற்கனவே உள்ளிழுத்த மூச்சை, இவ்வெழுத்துக்களைத் தனித்தனியாக அழுத்தி ஒலிக்கும் போது பெரிதாக வெளிவிடின், இம்மெய்களின் ஒலிகள் சரிவர எழும். இதுபற்றியே இப்மெய்கள் **மஹாப்ராண** எழுத்துக்கள் என்று பெயர் பெறுகின்றன.

மேலே உள்ள எழுத்துக்களைப் பின்வருமாறு எழுதப் பயிலல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ए யில் மேல் ஒரு கொம்பை ˎ என இடின் ऐ ஆகும்.



அப்பியாசம் 25

1. வரிசை வரிசையாக உரக்க வாசித்தல் வேண்டும்:

तदा	अलम्	पवनम्	षडानन
कदा	जलम्	तपनम्	गजानन
यदा	फलम्	हननम्	विनायक
सदा	बलम्	जननम्	मनागपि
मुदा	हलम्	मननम्	भजामसः

2. நாகரியிலெழுதுக :

மாலா, லவணம், வரணம், உமா.

3. பிரித்தெழுதுக :

मु, दा, छु, ठी, थ, सू, खु,

4. சேர்த்தெழுதுக.

प् + इ, ज् + ऋ, व् + ऌ, फ् + उ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 26

தமிழில் மொழி பெயர்த்தெழுதுக :

1. पिता दिशति
2. नटः पिबति
3. राजा पाति
4. काली हसति
5. नटः वसति
6. आतपः पाति
7. पिता जीवति
8. नरः ददाति
9. राजा उपदिशति
10. कविः पिबति
11. कृषिकः हसति
12. राजा तपति

அப்பியாசம் 27

வடமொழியிற் பெயர்த்தெழுதுக :

1. நடிகன் காட்டுகிறான்
2. தந்தை குடிக்கிறார்
3. அரசன் வருகிறான்
4. சிறுவன் சிரிக்கிறான்
5. கவி கொடுக்கிறார்
6. தந்தை காட்டுகிறார்
7. தாய் குடிக்கிறாள்
8. அரசன் விழுகிறான்
9. நடிகன் சீவிக்கிறான்
10. தந்தை சிரிக்கிறார்
11. சிறுவன் குடிக்கிறான்
12. நடிகன் கொடுக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரண்டாம் பாடம்

ख छ ठ थ फ

ख	खा	खि	खी	खु	खू	खृ	ख	खॢ
छ	छा	छि	छी	छु	छू	छृ	छॄ	छॢ
ठ	ठा	ठि	ठी	ठु	ठू	ठृ	ठॄ	ठॢ
थ	था	थि	थी	थु	थू	थृ	थॄ	थॢ
फ	फा	फि	फी	फु	फू	फृ	फॄ	फॢ

ए – க்கு உயிர்மெய்யில் े என்னும் ஒற்றைக் கொம்பு வரும்.

ऐ – க்கு உயிர்மெய்யில் ै என்னும் இரட்டைக் கொம்பு வரும்.

மெய்யுடன் अ வைச் சேர்த்த பின்புதான் இவ்வடையாளங்களை இடல் வேண்டும்.

क् + ए = के

ख् + ए = खे ; छ् + ए = छे ; ठ् + ए = ठे ; थ् + ए = थे ; फ् + ए = फे

क + ऐ = कै

ख् + ऐ = खै ; छ् + ऐ = छै ; ठ् + ऐ = ठै ; थ्+ ऐ = थै ; फ् + ऐ = फै

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரை அடுத்துவரும் தனிப்புள்ளி **அனுஸ்வாரம்** எனப்படும். இப்புள்ளி உயிரின் மேலேயே இடப்படும். अं, इं, उं என்பவற்றில் இப்புள்ளியைக் காணலாம். म् என்னும் மெய்யின் வேறுபாடான அனுஸ்வாரம் म् – ஐப் போன்றே மூக்கால் ஒலிக்கப்படும்.

नगरम् याति என்பதை **नगरं याति** என்றெழுதல் வேண்டும்.

சொற்றொகுதி 8

छाग:	ஆடு	पठति	படிக்கிறான்
फलम्	பழம்	लिखति	எழுதுகிறான்
फलति	பழுக்கின்றது	उदेति	உதிக்கிறான்
समीपे	சமீபத்தில்	सृजति	படைக்கிறான்

அப்பியாசம் 28

1. பிரித்தெழுதுக:
   खे, ठा, जृ, ॡ, णौ, चॄ, शा, णि, प्लृ, थी, फै

2. சேர்த்தெழுதுக:
   क् + ए, ज् + इ, थ् + अ, र् + उ, फ् + ऋ, स् + ए,
   ण् + अ, द् + उ, त् + ऌ, श् + इ.

3. அனுஸ்வாரம் எப்படி எழுதப்படும்? இதன் ஒலி எத்தகையது?

Digitized by Noolaham Foundation

அப்பியாசம் 29

தமிழில் மொழிபெயர்ந்தெழுதுக :

1. छागः पतति
2. फलं फलति
3. कुमारः पठति
4. आतपः उदेति
5. छागः पिबति
6. कुमारः लिखति
7. तरुः फलति
8. तातः पठति
9. पिताः लिखति
10. पाचकः पिबति
11. राजा विशति
12. नरः जीवति
13. पिता ददाति
14. कविः लिखति

அப்பியாசம் 30

வடமொழியிற் பெயர்த்தெழுதுக :

1. கவி படிக்கிறார்
2. ஆடு போகின்றது
3. சிறுவன் எழுதுகிறான்
4. சமையற்காரன் சிரிக்கிறான்
5. மனிதன் குடிக்கிறான்
6. ஆடு வசிக்கின்றது
7. பழம் விழுகின்றது
8. குரங்கு காப்பாற்றுகின்றது
9. தாய் படிக்கிறாள்
10. சமையற்காரன் வசிக்கிறான்
11. தந்தை விதைக்கிறார்
12. குரு படிக்கிறார்
13. தாய் கொடுக்கிறாள்
14. சிறுவன் எழுதுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதின்மூன்றாம் பாடம்

ओ औ घ् झ् द् ध् भ्

ओ - ஒ
औ - ஔ

घ् झ् द् ध् भ् என்னும் மெய்களாவது அவற்றின் ஒலிகளாவது தமிழிற் கிடையா.

ग् – ஐ நன்கு அழுத்தி உச்சரித்தால் घ् ஆகும்.

ज् – ஐ நன்கு அழுத்தி உச்சரித்தால் झ ஆகும்.

ड् – ஐ நன்கு அழுத்தி உச்சரித்தால் द् ஆகும்.

द् – ஐ நன்கு அழுத்தி உச்சரித்தால் ध् ஆகும்.

ब् – ஐ நன்கு அழுத்தி உச்சரித்தால் भ् ஆகும்.

பதினொராம் பாடத்திற் கூறியபடி இங்கும் இவற்றை மூச்சை வெளிவிட்டு அழுத்தி ஒலிக்க வேண்டியது அவசியம்.

आ – வின்மேல் ஒற்றைக்கொம்பு ओ வரின் ஆகும்.

आ – வின்மேல் இரண்டு கொம்புகள் औ வரின் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய எழுத்துக்கள் கீழ்வருமாறு எழுதப்படும்.



சொற்றொகுதி 9

खेदः	வாட்டம்	पीडयति	வருத்துகிறான்
पाठः	பாடம்	नवमः	ஒன்பதாவது
एषः	இவன், இந்த	चिरम्	நெடுங்காலம்

அப்பியாசம் 31

1. வரிசையாக உரக்க வாசித்தல் வேண்டும்.

फलम्	पथः	मठः	छदनम्
खलम्	कुथः	शठः	खननम्
छलम्	कथम्	हठः	पठनम्
हलम्	शफम्	घटः	कथनम्

2. பிரித்தெழுதுக :

हि, दु, णै, भृ, धृ, फू, झु.

3. சேர்த்தெழுதுக :

ध् + इ, झ + ऋ, ड् + इ, द् + ए, र् + इ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 32

தமிழில் மொழிபெயர்த்தெழுதுக :

1. एषः काकः
2. किरातः पीडयति
3. नरः पठति
4. एषः पिता
5. गुरुः पठति
6. छागः जीवति
7. पविः पडियति
8. नवमः पाठः
9. ऋषिः पिबति
10. तातः जीवति

அப்பியாசம் 33

வடமொழியிற் பெயர்த்தெழுதுக :

1. வெப்பம் பீடிக்கின்றது
2. ஒன்பதாவது மரம்
3. இவன் சமையற்காரன்
4. உழவன் எழுகிறான்
5. ஆடு சுமக்கின்றது
6. அரசன் குடிக்கிறான்
7. நடிகன் சீவிக்கிறான்
8. குரங்கு துன்புறுத்துகின்றது
9. இவன் சிறுவன்
10. தந்தை எழுகிறார்
11. குரங்கு கொடுக்கின்றது
12. வாட்டம் துன்புறுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினாலாம் பாடம்

घ झ ढ ध भ

घ	घा	घि	घी	घु	घू	घृ	घॄ	घॢ	घे	घै
झ	झा	झि	झी	झु	झू	झृ	झॄ	झॢ	झे	झै
ढ	ढा	ढि	ढी	ढु	ढू	ढृ	ढॄ	ढॢ	ढे	ढै
ध	धा	धि	धी	धु	धू	धृ	धॄ	धॢ	धे	धै
भ	भा	भि	भी	भु	भू	भृ	भॄ	भॢ	भे	भै

ओ வுக்கு உயிர்மெய்யில் े என ஒரு கொம்பு வரும்.

औ வுக்கு உயிர்மெய்யில் ै என இரு கொம்புகள் வரும்.

மெய்யுடன் முதலில் आ வைச் சேர்த்தபின்பே இக்கொம்புகளை எழுத்தின் மேலே இடல் வேண்டும்.

क् + ओ = को

घ् + ओ = घो ; झ् + ओ = झो ; ढ् + ओ = ढो ; ध् + ओ = धो;
भ् + ओ = भो.

क् + औ = कौ

घ् + औ = घौ ; झ् + औ = झौ ; ढ् + औ = ढौ ; ध् + औ = धौ;
भ् + औ = भौ.

சொற்றொகுதி 10

मूढः	மூடன்	धनिकः	செல்வன்
धेनुः	பசு	धावति	ஓடுகிறான்
धारा	தாரை	भाषति	பேசுகிறான்
भवानी	பவானி	दाता	கொடையாளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 34

1. பிரித்தெழுதுக :

   जा, की, पू, कौ, धौ, क्लृ, तो, नृ, वि, ण, शु,

2. சேர்த்தெழுதுக :

   द् + ए, त् + ऌ, झ् + आ, घ् + इ, द + ऋ, क् + उ,
   ज् + ओ, भ् + ऋ, घ् + ओ, भ् + ओ.

3. எழுதும்போது, சிறிது மட்டும் வேறுபட்டுப் பெரும்பாலும் ஒற்றுமைகொண்ட வடிவங்களைப் பெற்றுள்ள மெய்களை இணை இணையாக எடுத்துத் தருக. அவை தம்முள் வேறு படுவதெப்படி என்பதையும் சுட்டிக் காட்டுக. உ– ம் भ म भ – வின் மேற்கோடு குறைவு பெற்றது. म வின் மேற்கோடு முழுவதும் மூடிவருகின்றது.

அப்பியாசம் 35

தமிழில் மொழிபெயர்த்தெழுதுக :

1. कपिः धावति
2. तातः भाषते
3. धेनुः पिबति
4. धनिकः पाति
5. वृषः धावति
6. मूढः आयाति
7. धनिकः ददाति
8. ऋषिः भाषते
9. नृपः लिखति
10. वानरः पीडयति
11. नटः पठति
12. ऋषिः वसति

அப்பியாசம் 36

வடமொழியிற் பெயர்த்தெழுதுக :

1. வேடன் ஓடுகிறான்
2. கவி பேசுகிறார்
3. செல்வன் சிரிக்கிறான்
4. மூடன் எரிக்கிறான்
5. தாரை விழுகின்றது
6. பசு ஓடுகின்றது
7. உமை தவஞ்செய்கிறாள்
8. இருடி படிக்கிறார்
9. சூரியன் துன்புறுத்துகிறான்
10. இவன் நடிகன்
11. செல்வன் வசிக்கிறான்
12. மூடன் விதைக்கிறான்

Digitized by Noolaham Foundation

பதினைந்தாம் பாடம்

ग् ज् घ् ध् प् ष् ण्

கூட்டுமெய்கள்

ஒரு மெய் இன்னொரு மெய்யுடன் இணைந்து வரும்போது **கூட்டுமெய்** எனப்படும். கூட்டுமெய்யில் முதலில் வரும் மெய் முற்றும் எழுதப்படுவதில்லை. இம் மெய்யில் உள்ள **தாய்க்கோடும்** மெய்யைக் குறிக்க அடியில் வரும் சரித்த கோடும் மறைந்துவிடும். கூட்டுமெய்யில், ஈற்றில் வரும் மெய் முழுவதும் எழுதப்படும்.

ग् + य = ग्य ; ज् + य = ज्य ; घ् + य = घ्य; ध् + य = ध्य ;

प् + य = प्य ; ष् + य = ष्य ; ण् + य = ण्य.

எவனை? எவளை? எதை?

எவனை? எவளை? எதை? என்னும் வினாக்களுக்கு விடையாக வாக்கியங்களிலமையுஞ் சொற்கள் தமிழில் ஐ ஈறாக வருவது போல் வடமொழியில் म् ஈறாக வரும்.

சிறுவன் பாடத்தைப் படிக்கிறான்.

बाल : पाठम् पठति

म् சொல்லின் இறுதியில் ஏற்கனவே இருந்தால் மாற்றம் ஏற்படாது.

फलम्	– பழம்	कुसुमम्	– பூ
फलम्	– பழத்தை	कुसुमम्	– பூவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

: சொல்லின் இறுதியில் வரின் அது म् ஆக மாறும்.

राम :	இராமன்	बाल :	சிறுவன்
रामम्	இராமனை	बालम्	சிறுவனை

म् சொல்லிறுதியில் இராவிட்டால் म् ஐச் சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.

उमा	உமை	बाला	சிறுமி
उमाम्	உமையை	बालाम्	சிறுமியை

கீழ்வருஞ் சொற்களைத் தொகுதி தொகுதியாக உரக்க வாசித்தல் வேண்டும்.

दग्धम्	सञ्जनः	खण्डम्
दिग्धम्	हिञ्जलः	अण्डम्
दुग्धम्	लज्जितः	कुण्डम्
जग्धः	मृञ्जनः	पिण्डम्
जग्धः	सलज्जः	षण्डम्
धिषण्यम्	गुप्तिः	उपप्लवः
अरण्यम्	तृप्तिः	विप्लवः
भरण्यम्	सप्तिः	लिप्मा
हिरण्यम्	दीप्तिः	जुगुप्सा
वरेण्यम्	प्राप्तिः	अप्सराः
निष्कः	उष्णः	शुष्मः
उष्ट्रः	कृष्णः	भीष्मः
दिष्टः	पुष्पम्	तिष्यः
षष्ठः	शष्पम्	शिष्यः
कुष्ठः	बाष्पम्	विष्वक्

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்றொகுதி 11

राज्यम्	இராச்சியம்	अरण्यम्	காடு
अग्नि :	நெருப்பு	पूजयति	வழிபடுகிறான்
ध्यानम्	தியானம்	करोति	செய்கிறான்
भाग्यम्	அதிருஷ்டம்	लभते	பெறுகிறான்
पण्डित :	பண்டிதன்	च	'உம்'

அப்பியாசம் 37

1. உரக்க வாசித்தல் வேண்டும் :

छागः	खेदः	भारः	धाता	अभिमतम्
भागः	छेदः	मारः	माता	परिमितम्
यागः	वेदः	जारः	दाता	अनुगतम्
रागः	भेदः	तारः	पोता	उपकृतम्
वेगः	देवः	वारः	नेता	अपहृतम्

2. பிரித்தெழுதுக :

त्म, ज्य, ग्न, त्थ, ध्य, ण्व, ज्व, त्य, ध्व, ण्ड.

3. சேர்த்தெழுதுக :

ज् + ज, ग् + य, त् + क, ध् + म, ण् + ठ, त् + म,
ण् + य, त् + प, ग् + ग, ण् + ण.

அப்பியாசம் 38

தமிழில் மொழிபெயர்த்தெழுதுக :

1. तातः उमां पूजयति
2. कविः भाग्यं उभते
3. पिता गुरुं नमति
4. ऋषि : ध्यानं कतोति
5. गुरु : अग्निं पूजयति
6. काली कविं पाति
7. पिता अरण्यं याति
8. आतप : तापं करोति
9. माता बालकं नयति
10. राजा गुरुं पूजयति

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 39

வடமொழியிற் பெயர்த்தெழுதுக :

1. அரசன் இராச்சியத்தைக் காக்கிறான்.
2. இருஷி அக்கினியை வழிபடுகிறார்.
3. சிறுவன் பழத்தைப் பெறுகிறான்.
4. நெருப்பு வெப்பத்தை உண்டாக்குகின்றது.
5. உமை தவஞ் செய்கிறாள்.
6. குரங்கு மனிதனைத் துன்புறுத்துகின்றது.
7. தாய் பூவைக் கொடுக்கிறாள்.
8. நடிகன் குருவை வணங்குகிறான்.
9. தந்தை சிறுவனைக் காக்கிறார்.
10. நெருப்பு மரத்தை எரிக்கின்றது.
11. வேடன் காட்டை அடைகிறான்.

Digitized by Noolaham Foundation

பதினாறாம் பாடம்

च् न् त् भ् म् स् ख्

பதினைந்தாம் பாடத்திற் கூறியபடியே இங்கும் கூட்டுமெய்கள் சேர்ந்து எழுதப்படும்.

கூட்டுமெய்யின் முதலில் வரும் च् , य உடன் சேரும்போது च्‍ எனக் குறைந்து, च्य ஆகும்.

கூட்டுமெய்யின் முதலில் வரும் न् , य உடன் சேரும்போது न्‍ எனக் குறைந்து, न्य ஆகும்.

கூட்டுமெய்யின் முதலில் வரும் त् , य உடன் சேரும்போது त्‍ எனக் குறைந்து, त्यஆகும்.

கூட்டுமெய்யின் முதலில் வரும் भ् , य உடன் சேரும்போது भ्‍ எனக் குறைந்து, भ्य ஆகும்.

கூட்டுமெய்யின் முதலில் வரும் म्,य உடன் சேரும்போது म्‍ எனக் குறைந்து, म्य ஆகும்.

கூட்டுமெய்யின் முதலில் வரும் स् , य உடன் சேரும்போது स्‍ எனக் குறைந்து, स्य ஆகும்.

கூட்டுமெய்யின் முதலில் வரும் ख् , य உடன் சேரும்போது ख्‍ எனக் குறைந்து, ख्य ஆகும்.

மற்றைய மெய்களுடன் பெரும்பாலும் இப்படியே சேர்ந்து வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்வருஞ் சொற்களைத் தொகுதி தொகுதியாக உரக்க வாசித்தல் வேண்டும்:

पटच्चरः	अच्छः	चित्तम्
समुच्चरः	कच्छः	नृत्तम्
शिलोच्चय	गुच्छः	पित्तम्
उच्चावचम्	तुच्छः	वित्तम्
उच्चारितम्	पुच्छः	वृत्तम्

यत्नः	कृत्यम्	सत्पथः
सपत्नः	चित्यम्	मत्परः
ग्त्नम्	नित्यम्	तत्परः
त्नम्	नृत्यम्	उत्पलम्ः
नूत्नम्	सत्यम्	पत्तनम्

इत्वरः	उत्सः	गन्ता
गत्वरः	कुत्सः	चिन्ता
चित्वरः	गुत्सः	मन्ता
सत्वरः	वत्सः	यन्ता
सृत्वरः	त्सरुः	हन्ता

कन्दः	अन्धः	निम्बः
कुन्दः	गन्धः	रतम्बः
चन्दः	बन्धः	कुम्भः
छन्दः	स्कन्धः	जृम्भः
नन्दः	कन्धरः	दम्भः

Digitized by Noolaham Foundation

சொற்றொகுதி 12

अन्नम्	உணவு	अम्बिका	அம்பிகை
रम्यम्	அழகான	सत्यम्	உண்மை
अस्तं गच्छति	மறைகிறான்	अम्बुजम्	தாமரை
अन्धः	குருடான	पुस्तकम्	புத்தகம்
ख्यातिः	புகழ்	अस्ति	இருக்கிறான்
वरः	வரம்	शुभम्	நன்மை

அப்பியாசம் 40

1. பிரித்தெழுதுக :
   श्र, ष्प, व्व, थ्य, च्छ, घ्न, भ्व, ब्द, य्य, ग्ग, त्य, ण्ढ, स्म, ण्व.

2. சேர்த்தெழுதுக :
   ग् + य, श् + म, ष् + क, थ् + व, ध् + य, ब् + व,
   श् + न, श् + ल, भ् + म, च् + व, प् + म, य् + व.

3. பின்வருஞ் சொற்களுக்கு நேரான வடமொழிச் சொற்களைத் தருக:
   தந்தையை, கவியை, மனிதனை, காளியை, மரத்தை பூவை, அரசனை, பவானியை, காட்டை.

4. பின்வருவனவற்றிற்கு நேரான தமிழ்ச் சொற்களைத் தருக:
   तरुम्, कुमारम्, किरातः, फलम्, पाठम्, मूढम्, धनिकम्, राज्यम्, पण्डितम्, भाग्यम्.

அப்பியாசம் 41

தமிழில் மொழிபெயர்த்தெழுதுக :

1. सूर्यः अस्तं गच्छति
2. कविः ख्यातिं लभते
3. अन्धः नरः अरण्यं गच्छति
4. माता अम्बिकां पूजयति
5. पिता सत्यं भाषते
6. पण्डितः पुस्तकं पठति
7. उमा अम्बुजं लभते
8. कृशानुः अरण्यं दहति
9. आतपः अस्तं याति
10. उमा वरं ददाति
11. कुमारः पुस्तकं पठति

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 42

வடமொழியிற் பெயர்த்தெழுதுக :

1. செல்வன் அம்பிகையை வழிபடுகிறான்.
2. குரங்கு பழத்தைக் கொடுக்கின்றது.
3. மூடன் புத்தகத்தை எரிக்கிறான்.
4. நடிகன் புகழடைகிறான்.
5. தந்தை நன்மையைச் செய்கிறார்.
6. அம்பிகை தந்தையை வழிபடுகிறாள்.
7. அரசன் காட்டுக்குள் நுழைகிறான்.
8. நெருப்பு காட்டை எரிக்கின்றது.
9. தியானம் நன்மையைத் தருகின்றது.
10. தாய் உணவைத் தருகின்றது.
11. அரசன் வரம் பெறுகிறான்.

கீழ்வருஞ் சொற்களைத் தொகுதி தொகுதியாக உரக்க வாசித்தல் வேண்டும்.

शय्या	कुब्जः	गुल्मः
धाय्या	अब्दः	कुल्यः
तथ्यम्	लुब्धः	मल्लः
पथ्यम्	शब्दः	बिल्वः
रथ्यम्	स्तब्धः	नल्वः
पथ्या		

वल्कलम्	गव्यम्
फल्गुनम्	नव्यम्
कल्पना	वृश्चनः
गुल्पः	श्यामः
दल्भः	श्लेषः
	श्वेतः

Digitized by Noolaham Foundation

பதினேழாம் பாடம்

ब् व् य् थ् श् ल्

முந்திய இரு பாடங்களிலும் கூறியவாறே மேலே உள்ள எழுத்துக்கள் கூட்டுமெய்களில் எழுதப்படும்.

ब् , கூட்டுமெய்யில் य தொடரும்போது ब எனக் குறைந்து, ब्य என வரும்.

व् , கூட்டுமெய்யில் य தொடரும்போது व எனக் குறைந்து, व्य என ஆகும்.

य् , கூட்டுமெய்யில் य தொடரும்போது य எனக் குறைந்து, य्य என ஆகும்.

थ् , கூட்டுமெய்யில் य தொடரும்போது थ எனக் குறைந்து, थ्य என ஆகும்.

श् , கூட்டுமெய்யில் य தொடரும்போது श எனக் குறைந்து, श्य என ஆகும்.

ल् , கூட்டுமெய்யில் य தொடரும்போது ल எனக் குறைந்து, ल्य என ஆகும்.

श् சில இடங்களில் श्र் என எழுதப்படும் उ, ऋ, च, र , व என்னும் எழுத்துக்கள் தொடரும்போது श् – ஐ श्र् என எழுதுவது வழக்கமாகிவிட்டது.

श् + उ = शु, श् + ऋ = शृ, श् + च = श्च, श् + व = श्व.

இவற்றை शु, शृ, श्च, श्व என்றும் எழுதலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்றொகுதி 13

पुष्पम्	பூ	पथ्यम्	பத்தியமான, நன்மையான
काव्यम्	காவியம்	भीष्म :	பீஷ்மர்
उष्णम्	வெப்பமான	गच्छति	போகிறான்
त्वरितम्	விரைவாக	पृच्छति	கேட்கிறான்.
अश्व :	குதிரை	कल्याणम्	நன்மை.

அப்பியாசம் 43

1. பிரித்தெழுதுக :

   ल्म, स्थ, न्य, स्व, म्भ, ल्य, स्य, स्न, न्म, म्ब, ल्ह, स्फ.

2. சேர்த்தெழுதுக :

   न् + त, म् + न, ल् + क, स् + त, न् + द,
   म् + प, ल् + य, स् + न, न् + ध, म् + व.

3. श्रु, शृ, श्व, श्व, என்னும் எழுத்துக்களை வேறு எவ்விதமாக எழுதலாம்.

அப்பியாசம் 44

1. तरुः पुष्पं ददाति
2. पण्डितः काव्यं पठति
3. अनिलः उष्णं वाति
4. अश्वः त्वरितं धावति
5. भीष्मः नृपं पृच्छति
6. रम्यं पुष्पं पतति
7. बालः गुरुं पृच्छाति
8. माता पथ्यम् अन्नं ददाति
9. पिता कल्याणं लभते
10. भीष्मः ध्यानं करोति

Digitized by Noolaham Foundation

அப்பியாசம் 45

வடமொழியிற் பெயர்த்தெழுதுக :

1. அரசன் குதிரையை விரைவாகச் செலுத்துகிறான்.
2. தாய் பத்தியமான உணவைச் சமைக்கிறாள்.
3. தந்தை பண்டிதனை வணங்குகிறார்.
4. காகம் காட்டை அடைகின்றது.
5. தலைவன் அம்பிகையை வணங்குகிறான்.
6. தாய் அழகான பூவைக் கொடுக்கிறாள்.
7. தாமரை அழகான பூ.
8. அரசன் குதிரையைப் பெறுகிறான்.
9. சிறுவன் புத்தகத்தைப் படிக்கிறான்.
10. கவி காவியத்தை எழுதுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதினெட்டாம் பாடம்

ङ् ञ् द् ट् ह् क् र्

மேலே காணப்படும் மெய்கள், கூட்டு மெய்களில் தொடக்கத்தில் வரும்போது முழுவதுமே எழுதப்படும். தொடர்ந்து வரும் மெய், பக்கத்தில் நெருக்கியோ, அல்லது முதலில் வரும் மெய்யின் அடியிலோ, எழுதப்படும்.

द् + म = द्म, ह् + म = ह्म, द् + य = द्य,
ङ् + क = ङ्क, ञ् + च = ञ्च, द् + द = द्द,
क् + क = क्क, क् + व = क्व, प् + त = प्त.

ह् உடன் சேர்க்கப்படும் சில மெய்கள் ह – ன் உள்ளே கீழ்வருமாறு எழுதப்படும்.

ह् + न = ह्न ह् + ण = ह्ण

र् கூட்டு மெய்யின் தொடக்கத்தில் வரின், அது र्‍ என்னும் உருவம் பெற்றுத் தொடரும் மெய்யின் மேல் எழுதப்படும்.

र् + क = र्क र् + ज = र्ज

र கூட்டுமெய்யின் இறுதியில் வரும்போது, சரிந்த கோடொன்று, முதல் வரும் மெய்யின் பொருத்துள்ள இடத்தில் र – வைக் குறிப்பதற்காக இடப்படும்.

ज् + र = ज्र क् + र = क्र त् + र = त्र

त्र என்பது त्र என்றும் எழுதப்படும். பொருத்தில்லாது வளைந்திருக்கும் மெய்களுடன் र சேரும் போது அவற்றினடியில் ‸ என்ற அடையாளம் கீழ்வருமாறு இடப்படும்.

ड् + र = ड्र छ् + र = छ्र द् + र = द्र ह् + र = ह्र

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்வருஞ் சொற்களைத் தொகுதி தொகுதியாக உரக்க வாசித்தல் வேண்டும்.

चक्रम्	प्रक्रमः	कङ्कणः	अङ्गः
चुक्रम्	विक्रमः	सङ्कटः	पिङ्गः
तक्रम्	विक्रयः	शङ्कटः	भङ्गः
वक्रम्	सङ्क्रमः	शङ्करः	रङ्गः
शुक्रम्	निष्क्रमः	सङ्करः	वङ्गः
वञ्चकः	खञ्जः	अट्टः	गद्गदः
पञ्चमः	पिञ्जः	घट्टः	मुद्गरः
सञ्चयः	गुञ्जः	पट्टः	पुद्गलः
चञ्चयः	पुञ्जः	भट्टः	मुद्गलः
कञ्चुकः	मुञ्जः	हट्टः	मद्गरुः
बद्धः	गद्यम्	प्रणवः	अभ्रम्
बुद्धः	पद्यम्	प्रथमः	दभ्रम्
रुद्धः	मद्यम्	प्रसरः	शभ्रम्
वृद्धः	हृद्यम्	प्रबलः	चम्पकः
सिद्धः	चोद्यम्	प्रसवः	कम्पनः
अर्घः	गर्तः	अर्भकः	स्पर्शनः
वर्चः	अर्थः	मर्मरः	कर्षकः
सर्जः	गर्दभः	पर्ययः	बर्हिणः
कर्णः	कर्दमः	दुर्लभः	गुह्यकः
वर्णः	गर्धनः	सर्वतः	विह्वलः

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்றொகுதி 14

वञ्चकः	வஞ்சகன்	युद्धम्	போர், யுத்ததம்
पक्वम्	பக்குவமான	बुद्धिः	புத்தி
प्रशस्यः	போற்றத்தக்க	ग्रामः	கிராமம்
पद्मम्	தாமரை	ब्रह्मा	பிரமன்
आश्रमः	ஆச்சிரமம்	क्रूरः	கொடிய
कर्णः	கர்ணன்	प्रजा	பிரஜைகள், உயிர்கள்

அப்பியாசம் 46

1. பிரித்தெழுதுக :

ङ्ग, ह्म, ञ्छ, द्य, द्ध, र्न, द्र, द्व.

2. சேர்த்தெழுதுக :

द् + क, ह् + न, द् + य, क् + म, र् + ह, ह् + र, ग् + र.

3. தமிழில் மொழி பெயர்த்தெழுதுக :

1. श्रान्तः राजा ग्रामं गच्छति
2. ऋषिः अश्रमं विशति
3. अश्वः वेगेन धावति
4. क्रूरः किरातः छागं हरति
5. भोजनं पक्वम् अस्ति
6. प्रशस्यः कविः काव्यं करोति
7. पद्मं रम्यम् अरित
8. कर्णः युद्धं करोति

4. வடமொழியிற் பெயர்த்தெழுதுக :
   1. வஞ்சகன் பொருளைக் கவருகிறான்.
   2. சிறுவன் தாமரையைப் பார்க்கிறான்.
   3. கர்ணன் போற்றத்தக்க கொடையாளி.
   4. குதிரை விரைவாகப் பாய்கின்றது.
   5. பிரமன் உயிர்களைப் படைக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தொன்பதாம் பாடம்

ड् ठ् द् फ् छ् श्

மேலே காணப்படும் மெய்கள் கூட்டுமெய்களில் மிக அருகியே முதலெழுத்தாக இடம் பெறும். இப்படி இடம் பெற்று வரும்போது, இம்மெய்கள் முழுவதும் முதலில் எழுதப்படும். இவற்றைத் தொடரும் ஏனையவை கீழேயோ, பக்கத்திலோ எழுதப்படும். பக்கத்திலெழுதப்படும் போது, முதலில் வரும் மெய் சிறிது குறுக்கி எழுதப்படும். இரண்டாவது மெய் य ஆகில், அது நடுவிலிருந்து தொடுத்தெழுதப்படும்.

छ् + व = छ्व (தொடரும் மெய் கீழே வருவது).

ड् + य = ड्य (य நடுவிலிருந்து தொடங்கிப் பக்கத்திலெழுதப்படுவது).

य ஏனைய எழுத்துக்களுடன் முழுவதும் தோன்ற முடியாத இடங்களில் இவ்விதமே சேர்ந்தெழுதப்படும்.

ह् + य = ह्य

द् + य = द्य

क् + य = क्य

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்றொகுதி 15

श्वसिति	மூச்சு விடுகிறான்	विहङ्गमः	பறவை
मृतप्रायः	இறக்கும்	धनाढ्यः	செல்வன்
उड्डयते	பறக்கின்றது	मौढ्यम्	மடமை
पठ्यते	படிக்கப்படுகிறது	मन्दम्	மெதுவாக
निन्दति	இகழ்கிறான்	समग्रम्	முழுவதும்

सुष्ठु நன்றாக.

அப்பியாசம் 47

1. பிரித்தெழுதுக :

   ञ्छ, त्र, द्ध, द्र, द्व, ढ्र, ल्क, ड्र, ह्म, क्य, ड्ढ.

2. சேர்த்தெழுதுக :

   ड् + र, ठ् + य, द् + व, द् + र, र् + ल, छ् + क,
   ड् + ड, फ् + र, छ् + र.

3. தமிழில் மொழிபெயர்த்தெழுதுக :

   1. श्रान्तः विहङ्गमः पतति
   2. पुस्तकं समग्रं पठ्यते
   3. धनाढ्यः धनं ददाति
   4. मृतायः नरः मन्दं श्वसिति
   5. कविः वस्त्रं धनं च लभते
   6. धनाढ्यः धनं ददाति
   7. प्रशस्यः दाता ख्यातिं लभते
   8. कविः बुद्धिं निन्दति
   9. सूदः सुष्ठु पचति

4. வடமொழியிற் பெயர்த்தெழுதுக :

   1. அரசன் நன்மை பெறுகிறான்.
   2. பறவை மெதுவாகப் பறக்கின்றது.
   3. கவி செல்வனாக இருக்கிறான்.
   4. மடமை புத்தியை மழுப்புகிறது.
   5. வேடன் பயங்கரமான காட்டை அடைகிறான்.
   6. பண்டிதன் காவியத்தைப் படிக்கிறான்.
   7. சிறுவன் பாடத்தை எழுதுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபதாம் பாடம்

क्ष ज्ञ क्त; क्ष्ण स्त्र र्त्म

மேலே காணப்படுபவை கூட்டு மெய்கள், இவற்றுள் முதன் மூன்றில் எவ்வெம்மெய்கள் சேர்ந்துள்ளன என்பதை அறிய முடியாத வகையாக மெய்கள் உருக்குலைந்து விட்டன. கடைசியாக உள்ள மூன்று கூட்டு மெய்களில் ஒவ்வொன்றிலும் மும்மூன்று மெய்கள் உள்ளன. இவற்றைப் பின் வருமாறு பிரிக்கலாம்.

क्ष = क् + ष	क्ष्ण = क् + ष् + ण
ज्ञ = क् + ञ	स्त्र = स् + त् + र
क्त = क् + त	र्त्म = र् + त् + म

कार्त्स्न्य கூட்டு மெய்களில் எத்தனை மெய்களும் வரலாம். என்ற சொல்லின் ஈற்றில் வரும் கூட்டு மெய்யில் ஐந்து மெய்கள் வருகின்றன.

र्त्स्न्य = र् + त् + स् + न् + य.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழேவருஞ் சொற்களைத் தொகுதி தொகுதியாக உரக்க வாசித்தல் வேண்டும்.

अनुज्ञा	इन्द्रः	पक्ष्म
अभिज्ञा	उन्द्र	यक्ष्म
समज्ञा	चन्द्र	लक्ष्म
अवज्ञा	मन्द्र	भक्ष्यम्
रसज्ञा	वन्द्र	लक्ष्यम्

वक्त्रम्	वाक्त्वचम्
योक्त्रम्	निष्क्रमणम्
सोक्त्रम्	सङ्क्रमणम्
दन्तकक्त्रः	सङ्क्रन्दनः

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்றொகுதி 16

क्षमा	பொறுமை	शक्तिः	வல்லமை
अज्ञानम्	அறியாமை	प्राज्ञः	அறிவாளி
तीक्ष्णः	கூரிய	अत्र	இங்கே
वस्त्रम्	துணி	खड्गः	கத்தி
वर्त्म	வழி	आरोहति	ஏறுகிறான்
उष्ट्रः	ஒட்டகம்		

அப்பியாசம் 48

1. பிரித்தெழுதுக :
   त्त्थ, क्ष्ण, ग्ज्ञ, व्रय, ग्घ्म, ह्र, ष्ट्र, ग्व्य.

2. சேர்த்தெழுதுக :
   ङ् + क + य, ज् + ञ्, ङ् + घ् + र, ष् + प् + य, स + त् + र,
   त् + र् + य, र् + प् + य, ष् + द् + र, ध + न् + य, क् + ष ॥

3. தமிழில் மொழிபெயர்த்தெழுதுக :
   1. राजा क्षमां करोति
   2. अत्र वर्त्म न अस्ति
   3. कविः अज्ञानं निन्दति
   4. धनाढ्यः वस्त्रं ददाति
   5. खड्गः तीक्ष्णः अस्ति
   6. कपिः वृक्षं आरोहति
   7. राजा अरण्यं गच्छति

4. வடமொழியிற் பெயர்த்தெழுதுக :
   1. பொறுமை போற்றத்தக்கது.
   2. குதிரை கிராமத்திற்கு ஓடுகின்றது.
   3. கவி அறிவாளியாக இருக்கிறான்.
   4. அறிவு வல்லமையை உண்டாக்குகின்றது.
   5. ஒட்டகம் மெதுவாகப் போகின்றது.
   6. குதிரை இங்கு இல்லை.
   7. அறிவாளி வல்லமையையும் பொறுமையையும் பெறுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 49

आतपः उदेति । विहङ्गमः उड्डयम ः कूजति च । माता प्रबुध्यते पिता, च । बालकः च प्रबुध्यते क्षीरं च पिबति । पिता बालकं गुरुं नयति । बालकः गुरुं नमति पाठं पठति च । पाठः समग्रं पठ्ये । गुरु ः बालकं उपदिशति । सूर्यः अस्तं गच्छति । ततः बालकः गृहं आयाति ॥

அப்பியாசம் 50

இது ஆச்சிரமம். இங்கு முனிவர் வசிக்கிறார். இவர் தவஞ் செய்கிறார். சமீபத்தில் நதி ஓடுகின்றது. இந்த முனிவர் (ஒரு) கவி. இவர் காவியம் இயற்றுகிறார். அரசன் ஆச்சிரமத்தை அடைகிறான். கவி காவியத்தைப் படிக்கிறார். அரசன் காவியம் முழுவதையும் கேட்கிறான். பின்னர் அரசன் உடையையும் பொருளையும் அளிக்கிறான். அரசன் குதிரையில் ஏறுகிறான். குதிரை வேகமாகப் போகின்றது. அரசன் வீட்டை அடைகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்கள்

अ आ इ ई उ ऊ

ऋ ॠ ऌ ए ऐ

ओ औ अं अः

மெய்கள்

क् ख् ग् घ् ङ्

च् छ् ज् झ ञ्

ट् ठ् ड् ढ् ण्

त् थ् द् ध् न्

प् फ् ब् भ् म्

य् र् ल् व्

श् ष् स् ह्

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்மெய்கள்

क	ख	ग	घ	ङ	च	छ	ज	झ	ञ
का	खा	गा	घा	ङा	चा	छा	जा	झा	ञा
कि	खि	गि	घि	ङि	चि	छि	जि	झि	ञि
की	खी	गी	घी	ङी	ची	छी	जी	झी	ञी
कु	खु	गु	घु	ङु	चु	छु	जु	झु	ञु
कू	खू	गू	घू	ङू	चू	छू	जू	झू	ञू
कृ	खृ	गृ	घृ	ङृ	चृ	छृ	जृ	झृ	ञृ
कॄ	खॄ	गॄ	घॄ	ङॄ	चॄ	छॄ	जॄ	झॄ	ञॄ
कॢ	खॢ	गॢ	घॢ	ङॢ	चॢ	छॢ	जॢ	झॢ	ञॢ
के	खे	गे	घे	ङे	चे	छे	जे	झे	ञे
कै	खै	गै	घै	ङै	चै	छै	जै	झै	ञै
को	खो	गो	घो	ङो	चो	छो	जो	झो	ञो
कौ	खौ	गौ	घौ	ङौ	चौ	छौ	जौ	झौ	ञौ
कं	खं	गं	घं	ङं	चं	छं	जं	झं	ञं
कः	खः	गः	घः	ङः	चः	छः	जः	झः	ञः

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ट ठ ड ढ ण त थ द ध न प फ

टा ठा डा ढा णा ता था दा धा ना पा फा

टि ठि डि ढि णि ति थि दि धि नि पि फि

टी ठी डी ढी णी ती थी दी धी नी पी फी

टु ठु डु ढु णु तु थु दु धु नु पु फु

टू ठू डू ढू णू तू थू दू धू नू पू फू

टृ ठृ डृ ढृ णृ तृ थृ दृ धृ नृ पृ फृ

टॄ ठॄ डॄ ढॄ णॄ तॄ थॄ दॄ धॄ नॄ पॄ फॄ

टॢ ठॢ डॢ ढॢ णॢ तॢ थॢ दॢ धॢ नॢ पॢ फॢ

टे ठे डे ढे णे ते थे दे धे ने पे फे

टै ठै डै ढै णै तै थै दै धै नै पै फै

टो ठो डो ढो णो तो थो दो धो नो पो फो

टौ ठौ डौ ढौ णौ तौ थौ दौ धौ नौ पौ फौ

टं ठं डं ढं णं तं थं दं धं नं पं फं

टः ठः डः ढः णः तः थः दः धः नः पः फः

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ब	भ	म	य	र	ल	व	श	ष	स	ह
बा	भा	मा	या	रा	ला	वा	शा	षा	सा	हा
बि	भि	मि	यि	रि	लि	वि	शि	षि	सि	हि
बी	भी	मी	यी	री	ली	वी	शी	षी	सी	ही
बु	भु	मु	यु	रु	लु	वु	शु	षु	सु	हु
बू	भू	मू	यू	रू	लू	वू	शू	षू	सू	हू
बृ	भृ	मृ	यृ			वृ	शृ	षृ	सृ	हृ
बॄ	भॄ	मॄ	यॄ			वॄ	शॄ	षॄ	सॄ	हॄ
बॢ	भॢ	मॢ	यॢ			वॢ	शॢ	षॢ	सॢ	हॢ
बे	भे	मे	ये	रे	ले	वे	शे	षे	से	हे
बो	भो	मो	यो	रो	लो	वो	शो	षो	सो	हो
बौ	भौ	मौ	यौ	रौ	लौ	वौ	शौ	षौ	सौ	हौ
बं	भं	मं	यं	रं	लं	वं	शं	षं	सं	हं
बः	भः	मः	यः	रः	लः	वः	शः	षः	सः	हः

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுமெய்கள்

क्क क्ख क्त क्न क्म क्य क्र क्र क्ल क्व क्स क्ष

ख्य ग्ग ग्घ ग्ज ग्ण ग्द ग्ध ग्र ग्म ग्य ग्र ग्ल

ग्व घ्न घ्य घ्र घ्व ङ्क ङ्ख ङ्ग ङ्घ ङ्व च्च च्छ च्य

च्व ज्ज ज्ञ त्म त्य ज्र ज्ज्ञ ञ्च ञ्छ ञ्ज ट्ट ठ्य

ठ्य ड ड्य ड्र ढ्र ढ ण्ट ण्ढ ण्ण ण्र

ण्व त्क त्त त्थ त्न त्र त्य त्म त्व त्स थ्न थ्य

थ्व द्ग द्घ द्द द्ध द्न द्ब द्भ द्म द्य द्र द्व ध्म

व ध्य ध्र ध्व न्त न्थ न्द न्ध न्न न्र न्व न्ह

प्त प्न प्प प्म प्य प्र ब्ज ब्द ब्ध ब्ब ब्र भ्न भ्य

भ्र भ्व म्ब म्म म्य म्र म्ल य्य य्व य्र र्क र्ग

ल्क ल्य ल्ल ल्व व्य व्र व्व श्च श्छ श्न श्य श्र

श्ल श्व श्श ष्क ष्ट ष्ष ष्य स्क रत रय

रम स्न ह्न ह्म ह्य ह्र ह्व

त्त्थ त्त्व क्थ क्ष्ण क्ष्म क्ष्व ग्ज्ञ ग्ध्म ग्व्य ग्म्य घ्न्य

ङ्क्थ ङ्थ ङ्घ्न ङ्क्त ग्न्य त्द्स् श्च्य च्छ च्छ्र त्प्र

य त्स्न त्म्य द्भ्र ष्ट्र स्थ्य ह्मय स्त्न स्त्र ह्य ष्प्र

क्र त्स्न्व

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகராதி

சம்ஸ்கிருதம் – தமிழ்

अग्निः நெருப்பு
अत्र இங்கே
अनिलः காற்று
अन्धः குருடான
अन्नम् உணவு
अम्बुजम् தாமரை
अम्बिका அம்பிகை
अरण्यम् காடு
अस्तं गच्छति மறைகிறான்
அஸ்தமிக்கிறான்
अस्ति இருக்கிறான்
अश्वः குதிரை
अज्ञानम् அறியாமை
आतपः சூரியன்
आयाति வருகிறான்
आरोहहि ஏறுகிறான்
आश्रमम् ஆச்சிரமம்
उड्डयते பறக்கின்றது
उदेति உதிக்கிறான்
उपदिशति உபதேசிக்கிறான்
उमा உமை
उष्ट्रः ஒட்டகம்
उष्णम् வெப்பமான
ऋषिः இருடி
एषः இவன், இந்த
कटकः காப்பு
कपिः குரங்கு
कर्ण கர்ணன்
करोति செய்கிறான்
कल्याणम् நன்மை
कविः கவி
काकः காகம்
काव्यम् காவியம்
काली காளி
किरातः வேடன்
कुमारः சிறுவன்
कुसुमम् பூ
कूजति கூவுகிறது
कृषिकः உழவன்
कृशानुः நெருப்பு
करः கொடிய,
குரூரமான
क्षमा பொறுமை
क्षीरम् பால்
खड्गः கத்தி
खेदः வாட்டம்
ख्यातिः புகழ்
गच्छतिः போகிறான்
गुरुः குரு, ஆசிரியன்
ग्रामः கிராமம்
च 'உம்'
चिरम् நெடுங்காலம்
छागः ஆடு
जीवति சீவிக்கிறான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ततः பிறகு
तपः தவம்
तपति சூடேற்றுகின்றான்
தவஞ்செய்கிறான்
तरुः மரம்
तातः தந்தை
तापः வெப்பம்
तीक्ष्णः கூரிய
त्वरितम् விரைவாக
ददाति அளிக்கிறான்
दहति எரிக்கிறான்
दाता கொடையாளி
दिशति காட்டுகிறான்
धनाढ्यः செல்வன்
धनिकः செல்வன்
धारा தாரை
धावति ஓடுகிறான்
धेनुः பசு
ध्यानम् தியானம்
न இல்லை
नटः நடிகன்
नटति நடிக்கிறான்
नदी ஆறு
नमति வணங்குகிறான்
नयति செலுத்துகிறான்
नरः மனிதன்
नवमः ஒன்பதாவது
निन्दति இகழ்கிறான்
नृपः அரசன்
पक्वम् பக்குவமான
पचति சமைக்கிறான்
पठति படிக்கிறான்
पठ्यते படிக்கப்படுகிறது
पण्डितः பண்டிதன்
पतति விழுகிறான்
पतिः தலைவன்
पथ्यम् பத்தியமான
நன்மையான
पद्मम् தாமரை
पविः இடி
पाकः பாகம்
पाचकः சமையற்காரன்
पाठः பாடம்
पातः வீழ்ச்சி
पाति காப்பாற்றுகிறான்
पावकः நெருப்பு
पिता தந்தை
पिबति குடிக்கிறான்
पीडयति வருத்துகிறான்
पुनाति சுத்தமாக்குகிறான்
पुस्तकम् புத்தகம்
पुष्पम् பூ
पूजयति வழிபடுகிறான்
पृच्छति கேட்கிறான்
प्रबुध्यते எழுப்புகிறான்
प्रशस्य போற்றத்தக்க
प्राज्ञः அறிவாளி
प्रजा பிரஜைகள், உயிர்கள்
फलम् பழம்
फलति பழுக்கின்றது
बालकः சிறுவன்
बुद्धिः புத்தி
ब्रह्मा பிரமன்
भवानी பவானி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

भाग्यम् அதிர்ஷ்டம்
भाषते பேசுகிறான்
भीष्मः பீஷ்மர்
मन्दम् மெதுவாக
माता தாய்
मीनः மீன்
मूढः மூடன்
मृतप्रायः இறக்கும்
मौढयम् மடமை
याति போகிறான்
युद्धः போர், யுத்தம்
रम्यम् அழகான
राजा அரசன்
राज्यम् இராச்சியம்
लभते பெறுகிறான்
लिखति எழுதுகிறான்
वञ्चकः வஞ்சகன்
वपति விதைக்கிறான்
वर्त्म வழி
वरः வரம்
वसति வசிக்கிறான்
वस्त्रम् துணி, உடை
वहति தாங்குகிறான்
वाति வீசுகிறது
वानरः குரங்கு
विशति நுழைகிறான்
विहङ्गमः பறவை
वृषः எருது
शक्तिः வல்லமை
शिशुः குழந்தை
शुभम् நன்மை
श्रान्तः களைத்த
श्वसिति மூச்சுவிடுகிறான்
सत्यस् உண்மை
समग्रम् முழுவதும்
समीपे சமீபத்தில்
सुष्ठु நன்றாக
सृजति படைக்கிறான்
हरति கவருகிறான்
हसति சிரிக்கிறான்

தமிழ் – சம்ஸ்கிருதம்

அதிர்ஷ்டம் भाग्यम्
அம்பிகை अम्बिका
அரசன் नृपः, राजा
அளிக்கிறான் ददाति
அழகான रम्यम्
அறியாமை अज्ञानम्
அறிவாளி प्राज्ञः
ஆச்சிரமம் आश्रमः
ஆடு छागः
ஆறு नदी
இகழ்கிறான் निन्दति
இங்கே अत्र
இடி पविः
இந்த एषः
இராச்சியம் राज्यम्
இருக்கிறான் अस्ति
இருடி ऋषिः
இல்லை न
இவன் एषः
இறந்துகொண்டிருக்கும் मृतप्रायः

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடை वस्त्रम्
உணவு अन्नम्
உண்மை सत्यम्
உதிக்கிறான் उदेति
உபதேசிக்கிறான் उपदिशति
உமை उमा
உம் ' च '
உழவன் कृषिकः
எரிக்கிறான் दहति
எருது वृषः
எழுதுகிறான் लिखति
எழும்புகிறான் प्रबुध्यते
ஏறுகிறான் आरोहति
ஒட்டகம் उष्ट्रः
ஒன்பதாவது नवमः
ஓடுகிறான் धावति
கத்தி खड्गः
கர்ணன் कर्णः
களைத்த श्रान्तः
கவருகிறான் हरति
கவி कविः
காகம் काकः
காட்டுகிறான் दिशति
காடு अरण्यम्
காப்பாற்றுகிறான் पाति
காப்பு कटकः
காவியம் काव्यम्
காளி काली
காற்று अनिलः
கிராமம் ग्रामः
குடிக்கிறான் पिबति
குதிரை अश्वः
குரங்கு कपिः, वानरः
குரு गुरुः
குருடான अन्धः
குரூரமான क्रूरः
குழந்தை शिशुः
கூரிய तीक्ष्णः
கூவுகிறது कूजति
கொடிய क्रूरः
கொடுக்கிறான் ददाति
கொடையாளி दाता
கேட்கிறான் पृच्छति
சமீபத்தில் समीपे
சமையற்காரன் समीपे
சமையற்காரன் पाचकः
சிரிக்கிறான் हसति
சிறுவன் कुमारः, बालकः
சீவிக்கிறான் जीवति
சுத்தமாக்குகிறான் पुनाति
சூடாக்குகிறான் तपति
சூரியன் आतपः
செலுத்துகிறான் नयति
செய்கிறான் करोति
செல்வன் धनिकः, धनाढ्यः
தந்தை तातः, पिता
தலைவன் पतिः
தவஞ்செய்கிறான் तपति
தவம் तपः
தாங்குகிறான் वहति
தாமரை अम्बुजम्, पद्मम्
தாய் माता
தாரை धारा
தியானம் ध्यानम्
துணி वस्त्रम्
நடிகன் नटः

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடிக்கிறான் नटति
நன்மை शुभम, कल्याणम्
நன்மையான पथ्यम्
நன்றாக सुष्ठु
நுழைகிறான் विशति
நெடுங்காலம் चिरम्
நெருப்பு पावकः, कृशानुः
பக்குவமான पक्वम्
பசு धेनुः
படிக்கப்படுகிறது पठ्यते
படிக்கிறான் पठति
படைக்கிறான் सृजति
பண்டிதன் पण्डितः
பத்தியமான पथ्यम्
பவானி भवानी
பழம் फलम्
பழுக்கின்றது फलति
பறக்கின்றது उड्डयते
பறவை विहङ्गमः
பாகம் पाकः
பாடம் पाठः
பால் क्षीरम्
பிரமன் ब्रह्मा
பிரஜைகள் प्रजा
பிறகு ततः
பீஷ்மர் भीष्मः
புகழ் ख्यातिः
புத்தகம் पुस्तकम्
புத்தி बुद्धिः
பூ कुसुमम् , पुष्पम्
பெறுகிறான் लभते
பேசுகிறான் भाषते
பொறுமை क्षमा

போகிறான் याति, गच्छति
போற்றத்தக்க प्रशस्यः
மடமை मौढ्यम्
மரம் तरुः
மறைகிறான் अस्तं गच्छति
மனிதன் नरः
மீன் मीनः
முழுவதையும் समग्रम्
மூச்சுவிடுகிறான் श्वसिति
மூடன் मूढः
மெதுவாக मन्दम्
யுத்தம் युद्धः
வசிக்கிறான் वसति
வஞ்சகன் वञ्चकः
வணங்குகிறான் नमति
வரம் वरः
வருகின்றான் आयाति
வருத்துகிறான் पीडयति
வல்லமை शक्तिः
வழி वर्त्म
வழிபடுகிறான் पूजयति
வாட்டம் खेदः
வாள் खड्ग
விதைக்கிறான் वपति
விழுகிறான் पतति
விரைவாக त्वरितम्
வினவுகிறான் वृच्छति
வீசுகிறது वाति
வீழ்ச்சி पातः
வெப்பமான उष्णम्
வெப்பம் तापः
வேடன் किरातः

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்ஸ்கிருத இலகு போதம்

பாகம் II

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ॐ

॥ संस्कृतलघुबोधः ॥

சம்ஸ்கிருத

இலகு போதம்

இரண்டாம் புத்தகம்

AUTHOR:
K. KAILASANATHA KURUKKAL M.A, Ph.D.
Sanskrit Lecturer
UNIVERSITY OF CEYLON

Printed at
THE TRICHINOPOLY UNITED PRINTERS
TIRUCHIRAPALLI – 2

விலை ரூ. 2–50

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலா நிலைய வெளியீடுகள்

கீழ்வரும் புத்தகங்கள் விற்பனைக்குத் தயாராக இருக்கின்றன.

1. சம்ஸ்கிருத இலகுபோதம் முதற் புத்தகம்
   (1^{st} Form மாணவர்க்கேற்றது)

2. சம்ஸ்கிருத இலகுபோதம் இரண்டாம் புத்தகம்
   (2^{nd} Form மாணவர்க்கேற்றது)

3. வடமொழி இலக்கிய வரலாறு
   (வைதிக இலக்கியம் H.S.C. Uni. Ent. மாணவர்க்கேற்றது)

கீழ்வரும் புத்தகங்கள் விரைவில் வெளிவர இருக்கின்றன:–

1. சம்ஸ்கிருத இலகுபோதம் மூன்றாம் புத்தகம்
   (J.S.C. மாணவர்க்கேற்றது)

2. சம்ஸ்கிருத இலகுபோதம் நான்காம் புத்தகம்
   (S.S.C. மாணவர்க்கேற்றது)

3. சம்ஸ்கிருத இலகுபோதம் ஐந்தாம் புத்தகம்
   (H.S.C. Uni. Ent. மாணவர்க்கேற்றது)

4. சம்ஸ்கிருத இலக்கணச் சுருக்கம்
   (பல்கலைக் கழக மாணவர்க்கேற்றது)

மேற்காணும் புஸ்தகங்கள் கிடைக்குமிடம்

கலா நிலையம்,

175, செட்டியார் தெரு, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை

இலகுபோதம் முதற் புத்தகத்தில் எழுத்துக்களை எழுதும் முறையும், அவற்றை ஒலிக்கும் வகையும் விளக்கப்பட்டன. அவற்றை நன்கு பயின்றபின் மாணவர்கள் சம்ஸ்கிருதத்தை மேலுந் தொடர்ந்து படிப்பதற்கேற்றவாறு இவ்விரண்டாம் புத்தகம் எழுதப்பட்டுள்ளது. இதில், முதலில் வரும் முப்பது பாடங்களில் அத்தியாவசியமாக வேண்டப்படும் இலக்கணவறிவைப் புகட்டும் முக்கியமான விஷயங்கள் சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளன. இப்புத்தகத்தைப் படித்து முடிந்ததும், மாணவர், சாதாரண நடையிலமைந்துள்ள சம்ஸ்கிருதப் பாடல்களையும், உரைநடையிலமைந்துள்ள சம்ஸ்கிருதப் பாடல்களையும், உரைநடையிலுள்ள கதைகளையும், தாமே வாசித்து விளங்கவும், மொழிபெயர்க்கவும் வேண்டிய ஆற்றலைப் பெறுவர். இனி வெளிவரவிருக்கும் மூன்றாம், நான்காம், ஐந்தாம் புத்தகங்களில் விரிவாகக் கூறப்படவிருக்கும் இலக்கண விளக்கங்களை இலகுவிற் கிரகிப்பதற்கு இப்புத்தகம் மாணவர்களைத் தகுதி வாய்ந்தவர்களாகச் செய்யும். சம்ஸ்கிருதம் படிக்கும் மாணவர்க்கு மிகவும் பயன்படும் என்னும் நோக்குடன் இப்புத்தகத்தை உருவருக்கியுள்ளேன்.

கா. கைலாசநாதக் குருக்கள்

இலங்கைப் பல்கலைக் கழகம்,
பேராதனை.
26.01.1962

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 1

வினைச் சொற்களுக்கு அடிப்படையாக உள்ளவை வினையடிகள். இவை பத்துக் கணங்களாக வகுக்கப்பட்டுள்ளன. இரண்டாம் மூன்றாம் கணங்கள் நீங்கிய ஏனைய கணங்கள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விகரணம் உண்டு.

முதற் கணம்

முதற் கணத்துக்கு உரிய விகரணம் अ. இக்கணத்தில் வரும் வினையடியுடன் முதலில் अ விகரணத்தைச் சேர்த்துப் பிறகு உரிய விகுதியை இறுதியிற் கூட்டல் வேண்டும். पत् என்பது முதலாங்கணத்தில் வரும் வினையடி. ति என்பது நிகழ்காலப் படர்க்கையொருமை விகுதி. கீழ்வரும் உதாரணம் இவற்றைச் சேர்த்து நிகழ்காலப் படர்க்கையொருமையை ஆக்கும் வகையை விளக்குகின்றது.

पत्	(வினையடி)
पत् + अ	(வினையடி + விகரணம்)
पत् + अ + ति	(வினையடி + விகரணம் + விகுதி)
पतति	(நிகழ்காலப் படர்க்கையொருமை)

ஒவ்வொரு பாலுக்கும் தனித்தனி விகுதி கிடையாது. எனவே, पतति என்பது பொதுவாக நின்று விழுகிறான், விழுகிறாள், விழுகின்றது என மூன்று பால்களையும் ஏற்றவாறு காட்டும், எழுவாய் கூறப்படாத இடங்களிலெல்லாம் விகுதியே எழுவாயையுணர்த்தும். पतति என்றால் **அவன்** விழுகின்றான். **அவள்** விழுகின்றாள், **அது** விழுகின்றது என்னுங் கருத்துக்கள் சந்தர்ப்பம் நோக்கித் தக்கவாறு கொள்ளப்படல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 1

தமிழில் மொழிபெயர்த்தெழுதுக :

1. वदति।
2. चलति ।
3. हसति ।
4. चरति ।
5. वहति ।
6. पचति ।

அப்பியாசம் 2

சம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்த்தெழுதுக :

1. அவன் ஓடுகிறான்.
2. அது எரிகின்றது.
3. அவள் விழுகிறாள்.
4. அவன் விழுகிறான்.
5. அவள் பேசுகிறாள்.
6. அவன் படிக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 2

பெயர்ச் சொற்களுக்கடிப்படையாக உள்ளவை பெயரடிகள். இவை மூன்று பால்களாக வகுக்கப்பட்டுள்ளன. அவை, ஆண்பால், பெண்பால், அலிப்பால் என்பன. பெயரின் கருத்தைக் கொண்டு அதன் பாலை எப்பொழுதும் ஊகித்தறிதல் எளிதன்று. நிகண்டிலும், அகராதியிலும் ஒவ்வொரு பெயருக்குப் பக்கத்திலும் அதன் பால் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காணலாம். இப்புத்தகத்தினிறுதியிலுள்ள சொற்றொகுதிகளிலும் பால் பற்றிய குறிப்புகள் உள்ளன. அவற்றை அவ்வப்போது அறிந்து மனதிற் பதித்துக் கொள்ளலவசியம்.

பெயர்கள் ஏழு வேற்றுமைகளில் வரும். ஒரு வாக்கியத்தின் எழுவாய் முதல் வேற்றுமையில் அமையும். रामः என்பது முதல் வேற்றுமைச் சொல்.

रामः पतति ।

இராமன் விழுகின்றான்.

பெயரடிகள் உயிரீறாகவும் மெய்யீறாகவும் காணப்படும். பெரும்பாலான உயிரீற்றுப் பெயரடிகள் अ, आ, इ, ई, उ, ऋ என்பவற்றுள் ஒன்றை ஈற்றில் கொண்டு வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரீற்றுப் பெயர்கள், **முதல் வேற்றுமையில்** கீழ் வருமாறு முடிபுகளைப் பெறும்:

ஈற்றில் வரும் अ முதல் வேற்றுமையில் अः என மாறும்.

ஈற்றில் வரும் इ முதல் வேற்றுமையில் इः என மாறும்.

ஈற்றில் வரும் उ முதல் வேற்றுமையில் उः என மாறும்.

ஈற்றில் வரும் ऋ முதல் வேற்றுமையில் आ என மாறும்.

எனவே, राम என்பது रामः என வரும்.

हरि என்பது हरिः என வரும்.

गुरु என்பது गुरुः என வரும்.

पितृ என்பது पिता என வரும்.

அலிப்பாலில்

ஈற்றில் வரும் अ முதல் வேற்றுமையில் अम् என மாறும்

फल என்பது फलम् என வரும்.

ஈற்றில் வரும் आ, ई என்பன முதல் வேற்றுமையில் மாறா. இவ்வுயிர்களை ஈறாக உடைய பெயர்கள் பெண்பாற் பெயர்களாம்.

சந்தி விதி 1. சொல்லின் ஈற்றில் வரும் अः மெல்லின மெய் தொடரும்போதும், अ தொடரும் போதும் ओ என மாறும்.

रामः वदति = रामो वदति ।

नर : अयम् = नरो अयम् ।

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 3

தமிழில் மொழிபெயர்த்தெழுதுக :

1. नृपो जयति ।
2. पिता वदति ।
3. पत्रम् पतति ।
4. अग्निः दहति ।
5. प्रभुः त्यजति ।
6. कन्या हसति ।

அப்பியாசம் 4

சம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்த்தெழுதுக :

1. பாம்பு அசைகின்றது.
2. குதிரை ஓடுகின்றது.
3. நெருப்பு எரிகின்றது.
4. குதிரை இழுக்கின்றது.
5. சமையற்காரன் சமைக்கிறான்.
6. அரசன் சிரிக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 3

ஒரு பெயரைச் சார்ந்து வருஞ் சொல் விசேடணம் எனப்படும். இது, தான் விசேடிக்கும் பெயரின் பாலையும், வேற்றுமையையுந் தானும் ஏற்று வரும். **रमणीय** (அழகான) என்பது ஒரு விசேடணம். இது ஆண்பாற் பெயரைத் தழுவி வரும்பொழுது **रमणीयः** என்றும் பெண்பாற் பெயருடன் **रमणीया:** என்றும் அலிப்பாற் பெயருடன் **रमणीयम्** என்றும் முதல் வேற்றுமையில் வரும். ஏனைய வேற்றுமைகளிலும் உரிய முடிபுகளைப் பெற்றுத் தகுந்தவாறு வரும். வாக்கியங்களில் வரும் பொழுது விசேடணம் பெயருடன் பின்வருமாறு இணைந்து அமைக்கப்படும்.

मृगः रमणीयः पशुः । மான் அழகான மிருகம்
रमणीया कन्या वदति । அழகான பெண் பேசுகிறாள்.
रमणीयं पत्रं पतति । அழகான இலை விழுகின்றது.

சந்தி விதி 2 : வருமொழி முதலில் மெல்லெழுத்து வரின், अ, आ அல்லாத ஏனைய உயிர்களையடுத்து வரும் நிலைமொழியீற்று விசர்க்கம் ஆக र् மாறும்.

வல்லெழுத்துக்கள் :

क्, ख्; च्, छ्; ट्, ठ्; त्, थ्; प्, फ्; श्, ष्, स्

மெல்லெழுத்துக்கள் :

வல்லெழுத்தல்லாத ஏனைய எழுத்துக்கள் : உயிர்களும் மெல்லெழுத்துக்களே.

உதாரணம்

अग्निः दहति = अग्निर् दहति = अग्निर्दहति ।

இங்கு अग्निः என்னுஞ் சொல்லின் ஈற்று விசர்க்கம், अ, आ அல்லாத ஏனைய உயிருளொன்றான इ யையடுத்து வருகின்றது. வருமொழி முதலிற் காணப்படும் द् மெல்லெழுத்தாம். எனவே விசர்க்கம் र् ஆக மாற்றம் பெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 5

தமிழில் மொழிபெயர்த்தெழுதுக :

1. कृष्णः सर्पः चरति ।
2. उन्नतो वृक्षः पतति ।
3. क्रूरः शत्रुर्जयति ।
4. रमणीया कन्या वदति ।
5. मूषिको अल्पो जन्तुः ।

அப்பியாசம் 6

சம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்த்தெழுதுக :

1. குரு மிகவும் நல்லவர்.
2. பெண் அழகானவள்.
3. நீண்ட நதி ஓடுகின்றது.
4. இராமன் போற்றத்தக்க அரசன்.
5. நரி சிறிய பிராணியானாலும் வல்லது.
6. சிவந்த இலை விழுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 4

வினையடி விகரணத்துடன் சேர்த்தெழுதப்படும் பொழுது ஏவல் முன்னிலை **ஒருமை** ஆகும்.

पत् + अ = पत விழு
वद् + अ = वद பேசு

விளி வேற்றுமை

சம்ஸ்கிருத இலக்கண நூல்களில் விளி வேற்றுமை தனி வேற்றுமையாகக் கருதப்படுவதில்லை. முதற் வேற்றுமையே சிறு மாற்றத்துடன் விளிப்பொருளையுணர்த்த உபயோகிக்கப்படும்.

பெயரடியின் –

ஈற்றில் வரும் अ விளிப்பொருளில் மாறாதிருக்கும்.
ஈற்றில் வரும் आ விளிப்பொருளில் ए என மாறும்.
ஈற்றில் வரும் इ விளிப்பொருளில் ए என மாறும்.
ஈற்றில் வரும் ई விளிப்பொருளில் इ என குறுகும்.
ஈற்றில் வரும் उ விளிப்பொருளில் ओ என மாறும்.
ஈற்றில் வரும் ऋ விளிப்பொருளில் अः என மாறும்.

உதாரணம்

राम	என்பதன் விளி	राम	(ஈற்று अ மாறாதிருக்கின்றது)
बाला	என்பதன் விளி	बाले	(ஈற்று आ, ए ஆக மாறிற்று)
हरि	என்பதன் விளி	हरे	(ஈற்று इ, ए ஆக மாறிற்று)
नदी	என்பதன் விளி	नदि	(ஈற்று ई, इ எனக் குறுகிற்று)
गुरु	என்பதன் விளி	गुरो	(ஈற்று उ, ओ என மாறிற்று)
पितृ	என்பதன் விளி	पितः	(ஈற்று ऋ, अः என மாறிற்று)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 7

தமிழில் மொழிபெயர்ப்புத் தருக :

1. नृप, क्रूरः शत्रुर्जयति ।
2. सूद, शीघ्रम् पच ।
3. प्रभो, व्याघ्रः क्रूरो जन्तुः ।
4. गुरो, शिष्यः पठति ।
5. अग्ने, मा दह ।
6. पान्थो व्याघ्रो व्याघ्रः इति वदति ।

அப்பியாசம் 8

சம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்த்தெழுதுக :

1. சிறுவனே, சிரிக்காதே
2. பெண்ணே, மான் விரைவாக ஓடுகின்றது.
3. தந்தையே, "விரைவாகச் சமை" என்று தாய் சொல்லுகிறாள்.
4. மாணவனே, படி.
5. குரு, "பொய் சொல்லாதே" என்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 5

பெயர்கள் பன்மையில் வரும்பொழுது ஒன்றல்லாததும், இரண்டல்லாததுமான பலரையோ, பலபொருள்களையோ குறிக்கும்.

பெயரடியின் –

ஈற்றில் வரும் अ, आ முதல் வேற்றுமைப் பன்மையில் आः ஆகும்.

ஈற்றில் வரும் अ அலிப்பால் முதல் வேற்றுமைப்பன்மையில் आनि ஆகும்.

ஈற்றில் வரும் इ முதல் வேற்றுமைப் பன்மையில் अयः ஆகும்.

ஈற்றில் வரும் उ முதல் வேற்றுமைப் பன்மையில் अवः ஆகும்.

ஈற்றில் வரும் ऋ முதல் வேற்றுமைப் பன்மையில் अरः / आरः ஆகும்.

नर – नराः (ஈற்று अ திரிந்து आः என மாறிற்று)
बाला – बाला (ஈற்று आ திரிந்து आः என மாறிற்று)
हरि – हरयः (ஈற்று इ திரிந்து अयः என மாறிற்று)
गुरु – गुरवः (ஈற்று उ திரிந்து अवः என மாறிற்று)
पितृ – पितरः (ஈற்று ऋ திரிந்து अरः என மாறிற்று)
धातृ – धातारः (ஈற்று ऋ திரிந்து आरः என மாறிற்று)

நிகழ்காலப் படர்க்கையொருமையின் ஈற்றில் வரும் अति- யை நீக்கி அதே இடத்தில் अन्ति- யை வைத்தால் பன்மை ஆகும்.

वदति பேசுகிறான்
वदन्ति பேசுகிறார்கள்

சந்தி விதி 3. நிலைமொழி ஈற்றில் வரும் आः வருமொழி முதலில் மெல்லெழுத்திருப்பின், விசர்க்கத்தை இழந்துவிடும்.

नराः गच्छन्ति = नरा गच्छन्ति

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 9

தமிழில் மொழிபெயர்த்தெழுதுக :

1. नृपा रक्षन्ति ।
2. सर्पा अत्र वसन्ति ।
3. कन्या अतीव रमणीया ।
4. अश्वा भारं वहन्ति ।
5. समर्था गुरवः ।
6. गुरुर्वदति एवं मा वद इति ।

அப்பியாசம் 10

சம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்த்தெழுதுக :

1. காகங்கள் இங்கே வசிக்கின்றன.
2. குதிரை வெறுந் தேரை இழுக்கின்றது.
3. அழகான பெண்கள் ஒடுகின்றார்கள்.
4. மனிதனே, பொய் சொல்லாதே.
5. காய்ந்த இலைகள் விழுகின்றன.
6. உயர்ந்த மரங்கள் எரிகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 6

வினையடியுடன் என்ற स्यति முடிபைச் சேர்த்தால் எதிர்காலப் படர்க்கை யொருமையாகும்.

दा - दास्यति கொடுப்பான்.

சில வினையடிகளுக்கும் स्यति- க்கும் இடையில் इ தோன்றும்.

हन् - हनिष्यति கொல்லுவான்
वद् - वदिष्यति சொல்லுவான்.

சில எதிர்கால உருவங்களில் சந்தியின் விளைவால் வினையடிகள் உருமாறி வருவதைக் காணலாம். இம்மாற்றங்களைப்பற்றி இப்பொழுது அறிவது எளிதன்று. ஆகையால், கீழே கொடுக்கப்பட்டிருக்கும் எதிர்கால உருவங்களை அப்படியே மனனஞ் செய்தல் வேண்டும்.

वह् + स्यति = वक्ष्यति தாங்குவான்.
त्यज् + स्यति = त्यक्ष्यति கைவிடுவான்.
दह् + स्यति = धक्ष्यति எரிப்பான்.
पच् + स्यति = पक्ष्यति சமைப்பான்.
वस् + स्यति = वत्स्यति வசிப்பான்.

நிகழ்காலத்திற் போல், ஈற்றிற் காணப்படும் अति-யை अन्ति என மாற்றினால் பன்மையாகும். दास्यति கொடுப்பான். दास्यन्ति கொடுப்பார்கள்.

சந்தி விதி 4. क् ஐயோ अ, आ நீங்கிய ஏனைய உயிரையோ அடுத்துவரும் स्, தன்னை र् தொடராதபோதும், தான் ஈற்றில் வராத போதும் ष् ஆக மாறும்.

वक् + स्यति = वक् + ष्यति = वक्ष्यति
हन् + इ + स्यति = हन् + इ + ष्यति = हनिष्यति

तमिस्र என்பதில் र தொடருவதால் स् மாற்றம் பெறவில்லை. हविस् என்பதில் स् ஈற்றில் வருவதால் ष् ஆகி மாற்றம் பெறவில்லை. இது हविः என ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 11

தமிழில் மொழிபெயர்த்தெழுதுக :

1. व्याघ्रा धाविष्यन्ति ।
2. अत्र बका वत्स्यन्ति ।
3. हरिर्हसिष्यति ।
4. चन्द्रः अग्रं धावति ।
5. शिष्याः श्वो न पठिष्यन्ति ।
6. अग्निर्गृहं धक्ष्यति ।

அப்பியாசம் 12

சம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்த்தெழுதுக :

1. குதிரை நாளை ஓடும்.
2. பெண் நன்றாகச் சமைப்பாள்.
3. அரசன் அப்படிச் சொல்லுவான்.
4. சிறுவர்கள் மிகவும் சிரிப்பார்கள்.
5. சமையற்காரன் நன்கு சமைப்பான்.
6. மாணவன் இன்று பாடத்தைப் படிப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 7

இரண்டாவது வேற்றுமை செயப்படுபொருளை உணர்த்தும்.

ஒரு பெயரடியின்

ஈற்று अ இரண்டாம் வேற்றுமையில் अम् என மாறும்.
ஈற்று आ இரண்டாம் வேற்றுமையில் आम् என மாறும்.
ஈற்று इ இரண்டாம் வேற்றுமையில் इम् என மாறும்.
ஈற்று ई இரண்டாம் வேற்றுமையில் ईम् என மாறும்.
ஈற்று उ இரண்டாம் வேற்றுமையில் उम् என மாறும்.

ஈற்று ऋ இரண்டாம் வேற்றுமையில் { अरम् / आरम् } என மாறும்.

राम - रामम् (ஈற்று अ, अम् என மாறிற்று)
बाला - वालाम् (ஈற்று आ, आम् என மாறிற்று)
हरि - हरिम् (ஈற்று इ, इम् என மாறிற்று)
नदी - नदीम् (ஈற்று ई, ईम् என மாறிற்று)
गुरु - गुरुम् (ஈற்று उ, उम् என மாறிற்று)
पितृ - पितरम् (ஈற்று ऋ, अरम् என மாறிற்று)
धातृ - धातारम् (ஈற்று ऋ, आरम् என மாறிற்று)

சந்தி விதி 5. (அ) நிலைமொழி ஈற்றில் வரும் म् வருமொழி முதலில் இருக்கும் உயிருடன் தொடுத்தெழுதப்படும்.

गृहम् आयाति = गृहमायाति

(ஆ) நிலைமொழி ஈற்றில் வரும் म् மெய் தொடரின் அனுஸ்வாரமாக மாறும்.

हरिम् नमति = हरिं नमति

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 13

தமிழில் மொழி பெயர்த்தெழுதுக :

1. अन्नं पचति नरः ।
2. देवं नमति ब्राह्मणः ।
3. अश्वो रथं वहति ।
4. अग्निर्वनं धक्ष्यति ।
5. नरो धर्मं चरिष्यति ।
6. शृगालो वनं त्यक्ष्यति ।
7. माता कन्यां वदति ।
8. पिता पुत्रं वदति ।
9. पुत्रः सत्यं वदति ।
10. नदी समुद्रं वहति ।

அப்பியாசம் 14

சம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்த்தெழுதுக :

1. பாம்பு எலியை விடுகின்றது.
2. கவி விருப்பத்தைச் சொல்கிறார்.
3. ஆறு வேகமாகப் பாய்கின்றது.
4. நெருப்பு வீட்டை எரிக்கின்றது.
5. பெண் உணவைச் சமைக்கிறாள்.
6. எலி மலையைத் தோண்டுகின்றது.
7. மாணவன் குருவை வணங்குகிறான்.
8. அரசன் விருப்பத்தை அறிவான்.
9. ஆறு சிறுவனைக் கொண்டு போகின்றது.
10. நாளை குதிரை தேரை இழுக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 8

முதற்கணத்தில் வரும் வினையடியின் ஈற்றுயிர், அல்லது ஈற்றயற்குறில், अ விகரணம் தொடரும் பொழுது குண எழுத்தாக மாறும்.

अ – வின் குணம் अ.
इ ई – யின் குணம் ए.
उ ऊ – வின் குணம் ओ.
ऋ ॠ – வின் குணம் अर्.
ऌ – வின் குணம் अल्.

सृ (முதற்கணத்தில் வரும் வினையடி.)
सृ + अ (अ விகரணம் தொடருகின்றது).
सर् + अ (ऋ ஆகிய ஈற்றுயிர் குணமாக மாறி अर् ஆயிற்று.)
सर + अ + ति (விகுதி சேர்க்கப்படுகின்றது.)
सरति

बुध् (முதற்கண வினையடி.)
बुध् + अ (अ விகரணம் தொடருகின்றது.)
बोधे + अ (ஈற்றயற்குறில் उ குணமாக மாறி ओ ஆயிற்று)

बोध् + अ + ति (விகுதி சேர்க்கப்படுகின்றது.)
बोधति

சந்தி விதி 6. நிலைமொழி ஈறுகளான ए, ओ, ऐ, औ என்பன தம்மை உயிர் தொடரும்போது முறையே अय्, अव्, आय्, आव्, என மாறும்.

नी + अ + ति
ने + अ + ति (ஈற்றுயிர் குணமேற்றது.)
नय् + अ + ति (ஈற்று ए தம்மை अ என்னு உயிர் தொடர अय् என மாறிற்று)
नयति

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 15

தமிழில் மொழிபெயர்த்தெழுதுக :

1. पिता पुत्रं स्मरति ।
2. नृपः शत्रुं जयति ।
3. रामो नृपो भवति ।
4. सर्पो मन्दं सर्पति ।
5. रावणः सीतां हरति ।
6. चन्द्रो दिने दिने क्षयति ।
7. रामः सीतां वनं नयति ।
8. काको मूषिकं हरति ।
9. पिता पुत्रं शोचति ।
10. गुरुः तत्वं बोधति ।

அப்பியாசம் 16

சம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்த்தெழுதுக :

1. மகனே, உண்மை பேசு.
2. எலி மெதுவாக அசைகின்றது.
3. சிறுவன் பாடத்தைப் படிக்கிறான்.
4. பாம்பு எலியைக் கொண்டுபோகின்றது.
5. பெண் தந்தையை நினைக்கிறாள்.
6. இராமன் இராவணனை வெல்லுகிறான்.
7. கவி காவியத்தைப் படிக்கிறார்.
8. நாளை இராமன் அரசனாவான்.
9. இராமனே, சீதையைக் காட்டுக்கு அழைத்துப் போ.
10. சிறுவன் பாடத்தை நினைக்கிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 9

ஆண்பாலில் இரண்டாம் வேற்றுமைப்பன்மை பின்வருமாறு முடிபுகளை ஏற்கும் :

பெயரடியின் –

ஈற்றில் வரும் अ வுக்குப் பதில் आन् வரும்.
ஈற்றில் வரும் इ க்குப் பதில் ईन् வரும்.
ஈற்றில் வரும் उ வுக்குப் பதில் ऊन् வரும்.
ஈற்றில் வரும் ऋ க்குப் பதில் ॠन् வரும்.

नर – नरान् (अ – வுக்குப் பதிலாக आन् வந்தது.)
हरि – हरीन् (इ – க்குப் பதிலாக ईन् வந்தது.)
गुरु – गुरून् (उ – வுக்குப் பதிலாக ऊन् வந்தது.)
पितृ – पितॄन् (ऋ – வுக்குப் பதிலாக ॠन् வந்தது.)

அலிப்பாலில் முதல் வேற்றுமைப் பன்மைக்கும் இரண்டாம் வேற்றுமைப் பன்மைக்கும் வேறுபாடு கிடையாது.

पत्राणि இலைகள் (முதல் வேற்றுமை.)
पत्राणि இலைகளை (இரண்டாம் வேற்றுமை.)

சந்தி விதி 7. ஒரே இன உயிர்கள் நிலைமொழி ஈற்றிலும் வருமொழி முதலிலும் வரின் இரண்டிற்கும் பதிலாக அதே இன நெடில் தோன்றும்.

अत्र + अस्ति = अत्रास्ति

(நிலைமொழி ஈறு अ ; வருமொழி முதலும் अ. ஒரே இனமாயிருப்பதால் இரண்டும் கெட, அதே இன நெடிலான आ தோன்றிற்று.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 17

தமிழில் மொழிபெயர்த்தெழுதுக :

1. शत्रून् नृपो जयति ।
2. काका मूषिकान् हरन्ति ।
3. पुत्राः पितॄन् नमन्ति ।
4. शिष्याः पाठान् पठन्ति ।
5. नृपाः कवीन् स्मरन्ति ।
6. व्याघ्रा अधः पतन्ति ।
7. रामो रथं नयतीति सीता वदति ।
8. कन्यान्नं पचति ।
9. कवयः पुस्तकानि पठन्ति ।
10. अश्वा रथान् वहन्ति ।

அப்பியாசம் 18

சம்ஸ்கிருதத்தில் மொழி பெயர்த்தெழுதுக :

1. குதிரைகள் தேரை இழுக்கின்றன.
2. தந்தை பெண்களை அழைத்துப் போகிறார்.
3. நெருப்பு இலைகளை எரிக்கின்றது.
4. அரசன் பிரபுக்களை நினைக்கிறான்.
5. மகனே, மான்களைக் காட்டுக்குள் அழைத்துச் செல்.
6. இங்கே மரங்கள் விழுகின்றன.
7. மிகவும் வல்லமையுடைய அரசர்கள் செல்வார்கள்.
8. பெண்ணே, சிரிக்காதே,
9. தந்தையே, மக்களைக் கைவிடவேண்டாம்.
10. குருவே, மாணவன் உண்மையை அறிகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 10

முதற்கண வினையடிகளிற் சில விகரணம் விகுதி என்பவற்றை ஏற்குமுன் கீழே காணப்படும் மாற்றங்களைப் பெற்று வரும் :-

पा என்னுமடி पिब् என மாறி விகரணமும் விகுதியும் பெற்று पिबति ஆகும்.

स्था என்னுமடி तिष्ठ् என மாறி விகரணமும் விகுதியும் பெற்று तिष्ठति ஆகும்.

दा என்னுமடி यच्छ् என மாறி விகரணமும் விகுதியும் பெற்று यच्छति ஆகும்.

गम् என்னுமடி गच्छ् என மாறி விகரணமும் விகுதியும் பெற்று गच्छति ஆகும்.

घ्रा என்னுமடி जिघ्र् என மாறி விகரணமும் விகுதியும் பெற்று जिघ्रति ஆகும்.

दृश् என்னுமடி पश्य् என மாறி விகரணமும் விகுதியும் பெற்று पश्यति ஆகும்.

क्रम् என்னுமடி क्राम् என மாறி விகரணமும் விகுதியும் பெற்று क्रामति ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தி விதி 8. வருமொழி முதலில் உள்ள श्, ष्, स् என்பன நிலைமொழியீற்று விசர்க்கத்தைத் தம் உருவிற்கு விகற்பமாக மாற்றும்.

हरिः शेते = हरिश्शेते அல்லது हरिः शेते ।

कूर्मः सरति = कूर्मस्सरति அல்லது कूर्मः सरति ।

சந்தி விதி 9. நிலைமொழி ஈற்று விசர்க்கம் च् அல்லது छ् தொடரின் श् ஆக மாற்றம்.

நிலைமொழி ஈற்று விசர்க்கம் ट् அல்லது ठ् தொடரின் ष् ஆக மாறும்.

நிலைமொழி ஈற்று விசர்க்கம் त् அல்லது थ् தொடரின் स் ஆக மாறும்.

कूर्मः चरति = कूर्मश्चरति ।
रामः टीकां लिखति = रामष्टीकां लिखति ।
अश्वः तरति = अश्वस्तरति ।

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 19

தமிழில் மொழிபெயர்த்தெழுதுக :

1. मृगो जलं पिबति ।
2. अत्र पान्थस्तिष्ठति ।
3. मातान्नं यच्छति ।
4. व्याघ्रो मानुषं खादति ।
5. कन्या पुष्पाणि जिघ्रति ।
6. शिष्यो गुरुं पश्यति ।
7. नदी समुद्रं वहति ।
8. अग्निर्वनं दहति ।
9. सर्पो मूषिकं हरति ।
10. नृपः शत्रुं जयति ।

அப்பியாசம் 20

சம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்த்தெழுதுக :

1. இராமன் காட்டுக்குப் போகிறான்.
2. காகம் எங்கே தண்ணீர் குடிக்கின்றது?
3. மாணவனெப்பொழுதும் புத்தகத்தைப் படிப்பதில்லை.
4. குதிரை இங்கே இருக்கின்றது.
5. காகம் ஏன் நரியைக் காணவில்லை?
6. கொடையாளி பொருளை வழங்குகின்றான்.
7. இப்பொழுது அரசன் சபையை அடைகிறான்.
8. மரங்கள் ஏன் விழுகின்றன?
9. அரசர்கள் எங்கு செல்கிறார்கள்?
10. காகங்கள் எலியைப் பார்க்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 11

மூன்றாம் வேற்றுமை, கருவிப் பொருளிலும், கருத்தாப் பொருளிலும் உடனிகழ்வுப் பொருளிலும் வரும்.

பெயரடியின் –

ஈற்றில் வரும் अ மூன்றாம் வேற்றுமையில் एन என மாறும்.

ஈற்றில் வரும் इ மூன்றாம் வேற்றுமையில் इना என மாறும்.

ஈற்றில் வரும் उ மூன்றாம் வேற்றுமையில் उना என மாறும்.

ஈற்றில் வரும் ऋ மூன்றாம் வேற்றுமையில் रा என மாறும்.

உதாரணம் :

जन	जनेन	अलि	अलिना
मनु	मनुना	पितृ	पित्रा

சந்தி விதி 10. (i) ऋ, र्, ष्, என்பனவற்றுள் ஒன்றையடுத்துவரும் न्, தன்னை உயிரோ न्, म्, य्, व् என்னும் மெய்களிலொன்றோ தொடரும்பொழுது ण् ஆக மாறும்.

कीर् + न = कीर् + ण = कीर्ण

मुष् + नाति = मुष् + णाति = मुष्णाति

சந்தி விதி 10. (ii) மேலே கூறப்பட்ட ऋ, र्, ष्, என்பவற்றிற்கும் न – க்கு இடையே உயிரோ இடையெழுத்தோ, 'க' இன எழுத்தோ 'ப' இன எழுத்தோ, அனுஸ்வாரமோ அல்லது ह –வோ, தனித்தும் அன்று ஒருமித்தும் குறுக்கிட்டாலும் न्, ण् ஆக மாறும்.

अर्पणम् (र् க்கும் न् – க்கும் இடையில் प्, अ, இரண்டும் குறுக்கிட்டன.)

गृहाणाम् (ऋ – க்கும் न् – க்கும் இடையில் ह , आ இரண்டும் குறுக்கிட்டன.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 21

தமிழில் மொழிபெயர்த்தெழுதுக :

1. नरा अन्नेन जीवन्ति ।
2. सूदा अग्निनान्नं पचन्ति ।
3. पुत्रो हस्तेत पुष्पं हरति ।
4. पिता धनेन पुत्रं रक्षति ।
5. नरो गृहमग्निना दहति ।
6. नृणे बाणेन शत्रुं जयति ।
7. पुत्रः पित्रा सह ग्रामं गच्छति ।
8. मनुष्यः शास्त्रेण तत्वं बोधति ।
9. इदानीं पिता पुत्रेण सह वसति ।
10. दुहिताग्निना ओदनं पचति ।

அப்பியாசம் 22

சம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்த்தெழுதுக :

1. அரசன் அம்பினாற் புலியைக் கொல்லுவான்.
2. பகைவன் நெருப்பினால் வீட்டை எரிக்கிறான்.
3. தந்தையுடன் மைந்தன் காட்டுக்குப் போகிறான்.
4. அரசன் குதிரையினால் இரத்தத்தைச் செலுத்துகிறான்.
5. மாணவன் குருவுடன் வசிக்கிறான்.
6. தாய் பெண்ணுடன் ஆற்றுக்குப் போகிறாள்.
7. அரசன் தேரிற் காட்டுக்குப் போகிறான்.
8. செல்வத்தினாற் பயனில்லை.
9. தந்தை குருவிடம் ஏன் மகனுடன் போகிறார்?
10. அரசன் கவியுடன் சபையை அடைவான்.
11. தாயுடன் பிள்ளைகள் கோவிலுக்குப் போவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 12

வினையடியுடன் त விகுதியைச் சேர்த்தால் இறந்த காலச் செயப்பாட்டு வினைப்பெயரெச்சம் ஆகும். விசேடணங்கள் போன்று இவ்வெச்சங்கள் தாம் சாரும் பெயரைத் தழுவி அதே பால், எண் வேற்றுமைகளை ஏற்கும்.

जि - जित
हृ - हृत

சில எச்சங்கள் त – வுக்குப் பதிலாக इत என்பதைக் கொண்டு முடியும்.

पत् - पतित (= पत् + इत)
हस् - हसित (= हस् + इत)
चल् - चलित (= चल् + इत)
पठ् - पठित (= पठ् + इत)

சில எச்சங்களில், வினையடிகளின் ஈற்று நாசிகைகள் கெடும். பின்னர் எச்சவிகுதிகள் சேர்க்கப்படும்.

नम् - नत
गम् - गत
हन् - हत
मन् - मत
यम् - यत

சில எச்சங்களிற் சந்திவிளைவால் மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இவற்றுட் சில :

वच् - उक्त
त्यज् - त्यक्त
मुच् - मुक्त

नृपेण जितः शत्रुः कारागृहे वसति (இங்கு जितः விசேஷணமாக வந்தது.)
அரசனால் வெல்லப்பட்ட பகைவன் மறியல் வீட்டில் வசிக்கிறான்.

शत्रुः नृपेण जितः (இங்கு வினைமுற்றாக உபயோகிக்கப்பட்டுள்ளது.)
பகைவன் அரசனால் வெல்லப்பட்டான்.

மேற்காட்டிய இரண்டு பிரயோகங்களுள் இரண்டாவதே வழக்கில் அதிகமாகக் காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 23

தமிழில் மொழிபெயர்த்தெழுதுக :

1. अश्वेन रथो नीतः ।
2. रामेण रावणो हतः ।
3. शास्त्रं शिष्येण पठितम् ।
4. धनं चोरेण हृतम्
5. दुःखं मनुष्येण स्मृतम् ।
6. चोरो गृहं गतः ।
7. कुत्र त्यक्तो जितः शत्रुः ।
8. मृतः पिता पुत्रेण स्मृतः ।
9. एवमुक्तो नृपो वनं गतः ।
10. चोरः पतिना मुक्तः ।

அப்பியாசம் 24

சம்ஸ்கிருதத்தில் மொழிபெயர்த்தெழுதுக :

1. அரசனால் விடப்பட்ட மான் காட்டையடையும்.
2. தந்தையால் இவ்விதம் கூறப்பட்ட மைந்தன் துக்கப்படுகிறான்.
3. வேடனாற் கொல்லப்பட்ட மானை அவன் கண்டான்.
4. அடிக்கடி நினைக்கப்படும் பகைவன் விரைவில் அழிவான்.
5. கள்ளனாற் பொருள் அபகரிக்கப்பட்டது.
6. அரசன் வெல்லப்பட்ட இராச்சியத்தைத் துறந்தான்.
7. பகைவனால் விடப்பட்ட அம்பு அரசனைக் கொல்லும்.
8. மாணவனால் வணங்கப்பட்ட குரு என்ன சொல்கிறார்?
9. மான் எவ்விதம் வேடனாற் கொல்லப்பட்டது?
10. அரசனாற் கைவிடப்பட்ட கவி காட்டை அடைந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 13

மூன்று வகையான இறந்தகாலங்களுள் இரட்டித்து வரும் இறந்தகாலம் கண்ணுக்கெட்டாதவாறு காலத்தால் மிகத் தொலைவில் நிகழ்ந்த நிகழ்ச்சியை உணர்த்தும். இறந்தகாலப் படர்க்கை ஒருமை உருவங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. இவற்றை அப்படியே மனனம் செய்தல் வேண்டும்.

गम्	-	जगाम	कृ	-	चकार
वस्	-	उवास	सृ	-	ससार
वद्	-	उवाद	भ	-	बभूव
वच्	-	उवाच	तृ	-	ततार
वह्	-	उवाच	विश्	-	विवेश
दह्	-	ददाह	पच्	-	पपाच
भ्रम्	-	बभ्राम	दृश्	-	ददर्श
चर्	-	चचार	बुध्	-	बुबोध
हस्	-	जहास	हृ	-	जहार
जि	-	जिगाय	दा	-	ददौ
हन्	-	जघान	पा	-	पपौ

சந்தி விதி 11. ए , ओ என்னும் உயிர்கள் இரண்டையும் தொடரும் अ மறைந்துவிடும். இம் மறைவை 'ऽ' என்னும் **அவக்கிரக** அடையாளம் உணர்த்தும்.

रामो अश्वम् = रामोऽश्वम्

हरे अत्र = हरेऽत्र

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பியாசம் 25

தமிழில் மொழிபெயர்த்தெழுதுக :

1. रामो वनं जगाम ।
2. अश्वो रथमुवाह ।
3. अग्निर्वनं ददाह ।
4. शृगालोऽधः पपात ।
5. नरो धर्मं चचार ।
6. पिता कन्यां ददौ ।
7. गुरुरत्र वसति ।
8. माता कन्यामेवमुवाच ।
9. शिष्यो गुरुं ददर्श ।
10. नरः समुद्रं ततार ।

அப்பியாசம் 26

வடமொழியில் மொழிபெயர்த்தெழுதுக :

1. மனிதனாற் கைவிடப்பட்ட பொருளைக் கள்ளன் கண்டான்.
2. குதிரை தேரை இழுத்தது.
3. கள்ளன் ஆற்றைக் கடந்தான்.
4. நெருப்பு காட்டை எரித்தது.
5. கவி சபைக்குள் நுழைந்தான்.
6. சமையற்காரன் உணவைச் சமைத்தான்.
7. இராமன் அங்குமிங்கும் அலைந்தான்.
8. மான் தண்ணீர் குடித்தது.
9. அரசன் சத்துருவை வென்றான்.
10. குரங்கு கடலைக் கடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடம் 14

